# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு 2029 சித்திரை 29 (12-05-1998) செவ்வாய்க்கிழமை UTHAYAN– Ahively National Tamil Daily கதிர்: 141



13 MAY 1998
மாநகராட்சி யாழ்ப்பா


# இந்தியா 3 அணு வெடிப்புகளை வெற்றிகரமாகப் பரிசோதித்தது!

## அமெரிக்கா, பாகிஸ்தான் கண்டனம்! இலங்கை கவலை!

புதுடில்லி, மே 12

நிலத்துக்கு அடியிலான மூன்று அணு வெடிப்புப் பரிசோதனைகளை இந்தியா நேற்று நடத்தியது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பைப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் நேற்று மாலை வெளியிட்டார். இந்தியாவின் இந்தத் திடீர் பரிசோதனை உலக அளவில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்தில் ஹொக்ரான் பகுதியில் நேற்று மாலை 3-45 மணியளவில் இந்த அணு வெடிப்புப் பரிசோதனைகள் நடத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அணுவைப் பிளக்கும் முறையிலும் மிகக் குறைந்த சக்தியைக் கொடுக்கும் முறையிலும், அனல் அணு முறையிலும் இச்சோதனைகள் நடத்தப்பட்டதாகவும், விளைவுகள் எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடுகளை ஒத்திருந்ததாகவும் அவர் கூறினார்.

இச்சோதனையின் போது சுற்றுச் சூழலில் அணுக் கதிர்க் கசிவு ஏற்படவில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்த அணுச்சோதனையை வெற்றிகரமாக நடந்தி முடித்த விஞ்ஞானிகளுக்கும், நிபுணர்களுக்கும் பிரதமர் வாஜ்பாய் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்தியாவின் இந்தத் திடீர் அணுச் சோதனை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத்தில் வெசாக் நிகழ்வுகள்

பௌத்த வெசாக் தினத்தை ஒட்டிய நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றன.

யாழ். ஆரியகுளம் சந்திக்கு அருகில் அமைந்துள்ள நாக விகாரையில் விசேடவழிபாடுகள் நடைபெற்றன. பௌத்த துறவிகள், படையினர் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். பொது மக்களுக்கு தானமும் வழங்கப்பட்டது.

நயினாதீவு நாகவிகாரையில் இடம்பெற்ற நிகழ்வில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சடலம் ஒப்படைப்பு

வவுனியா, மே 12

கடந்த 8 ஆம் திகதி இரவு புல்மோட்டை இரண்டாம் வட்டாரத்தில் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரின் சடலம் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட உள்ளது.

கொல்லப்பட்டவர் ரமணன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரின் உடலை விடுதலைப் புலிகள் கையேற்கச் சம்மதித்ததையடுத்து புல்மோட்டைப் பொலீஸாரால் அவரின் உடல் செஞ்சிலுவைச் சங்க வவுனியா கிளையின் செயலாளர் சிவநாதன் கிஷோரிடம் ஒப்படைக்கப்பட்டது. தற்போது அவரின் உடல் வவுனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. அது இன்று இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதிக்கு எடுத்துச்செல்லப்பட உள்ளது. (ஐ-9-164)

# பேச்சு நடத்தப் புலிகள் 4 நிபந்தனைகள் விதிப்பு!

## ஐ.தே.க. பிரமுகர் வெளியிட்ட தகவல்

கொழும்பு, மே 12

இலங்கை அரசுடன் பேச்சு நடத்துவதற்கு நான்கு நிபந்தனைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் விடுத்திருப்பதாக ஐ. தே. கட்சிப் பிரமுகரான டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா கூறியிருக்கின்றார்.

இது பற்றிய தகவல் ஜனாதிபதி மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் ஆகியோருக்கு தெரியப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவை மேற்கோள் காட்டி கொழும்பு வெகுஜனத் தொடர்பு சாதனம் ஒன்று இத்தகவல்களை வெளியிட்டது.

★ தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கப்பட வேண்டும்.

★ வடக்கு—கிழக்கு மாகாணம் மீதான பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும்.

★ பாடசாலைகள், ஆஸ்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தப்பியோடிய படையினர் 5,000 பேர் திரும்பினராம்!

கொழும்பு, மே 12

இராணுவசேவையிலிருந்து வெளியேறி தலைமறைவானவர்கள் எனக்கருதப்பட்ட 15 ஆயிரம் பேரில் சுமார் 5 ஆயிரம் பேர் வரை பொது மன்னிப்பு கால அவகாசத்தைப் பயன்படுத்தி மீண்டும் சேவையில் இணைந்துள்ளதாக இராணுவ தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் நள்ளிரவுடன் 5 நாள் கால அவகாசம் முடிவடைந்துள்ளதையடுத்து பொலீஸாரும் இராணுவப் பொலீஸாரும் நேற்று முதல் ஏனையோரைத் தேடும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இராணுவ தளபதி ஜெனரல் றோகான் தளுவத்த இது தொடர்பாகத் தெரிவிக்கையில் —

தற்போதைய யுத்தத்திற்கு உடனடியாக 15 ஆயிரம் இராணுவ வீரர்கள் தேவைப்படுகின்றார்கள். ஏற்கனவே 5 தடவைகள் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. 15 ஆயிரம் பேர் சேவையிலிருந்து வெளியேறி இருப்பதால்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தப்பியோடிய பின் படையில் இணைந்த சிப்பாய் தற்கொலை!

மட்டக்களப்பு, மே 12

மட்டக்களப்பு சித்தாண்டி படை முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் இரவு தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இராணுவத்தை விட்டுத் தப்பிச் சென்று தலைமறைவாகியிருந்த இவர் சில மாதங்களுக்கு முன்பு கைது செய்யப்பட்டு மீண்டும் படை

(10ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மாமாங்கத்தில் கிரனேட் வீச்சில் 5 பொதுமக்கள் காயம்

மட்டக்களப்பு, மே 12

மட்டக்களப்பு மாமாங்கம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்கள் நடத்திய கிரனேட் தாக்குதலில் இரு பெண்கள் உட்பட 5 பேர் காயமடைந்தனர்.

வீடு ஒன்றுக்குச் சென்று விடுதலைப் புலிகளின் பெயரைக் கூறிக் கப்பம் கேட்ட

(10ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் 'கிபிர்' குண்டு வீச்சு!

வவுனியா, மே. 12

முல்லைத்தீவு மற்றும் அதனை அண்டிய சில கிராமங்கள் மீது இரு 'கிபீர்' விமானங்கள் நேற்று முன்தினம் காலை கடும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியதாக ''புலிகளின் குரல்'' வானொலி அறிவித்தது.

இத் தாக்குதலினால் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பைப் பரீட்சிக்க தலதா மாளிகைக்குள் துப்பாக்கியுடன் பெண்!

கொழும்பு, மே 12

கண்டியில் உள்ள தலதா மாளிகைக்குள் ஆயுதங்கள் சகிதம் நுழைந்த பெண் ஒருவர் அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேறியுள்ளார்.

தலதா மாளிகையின் பாதுகாப்பு ஏற்பாடுகளை இச் சம்பவம் கேள்விக்குறியாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலதா மாளிகைக்குள் ஆயுதங்களுடன் பிரவேசித்த பெண் வேறு யாரும் அல்ல ஒரு பெண் பொலீஸ் உத்தியோகஸ்தரே ஆவார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உடுப்பிட்டி சந்தி வல்லைவாளி

## ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய

வருடாந்த

## அலங்கார உற்சவம்

மெய்யடியார்களே!

மேற்படி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த **07 - 05 - 98** இல் ஆரம்பமாகி **16 - 05 - 98** இல் முடிவடைகின்றது. **11**ஆம் நாளாகிய **17-05-98** நண்பகல் அன்னதானமும் வழங்கப்படும்.

மு. குறிப்பு: உற்சவம் முடிவடைந்ததும் ஆலய புனருத்தாரண பாலஸ்தாபனம் செய்து வேலைகள் ஆரம்பமாகும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

பரஞ்சோதி ஆனந்தகுமார்
—ஆலய தர்மகர்த்தா

(55941)

# மரண அறிவித்தல்கள்

## அப்பாக்குட்டி வினாசித்தம்பி

தவசிக்குளம் மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட அப்பாக்குட்டி வினாசித்தம்பி 11-5-1993 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் அப்பாக்குட்டி - லட்சுமியின் ஏகபுத்திரனும், சுப்பிரமணியம் - இராசம்மாவின் மூத்த மருமகனும், நாகம்மாவின் அன்புக்கணவரும், சிவகுமார் (B. Com), சிவரஞ்சனி, சிவநிதி, மனுஷா ஆகியோரின் அன்புத்தந்தையும், பொன்னுத்துரை, இரத்தினம் (சவூதி), ராணி, துரை (யாழ்ப்பாணம்), செல்வம் (ஜேர்மனி), ஸ்ரீ, வவா, குணமணி (வவுனியா), சந்திரன், பவளம் (பளை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், மனோன்மணி, செல்வராணி, தர்மலிங்கம், யசோ, கலைவாணி, மலர், மனோரஞ்சிதம், கிருஷ்ஷானந்தன். சுனாபதா, கணேஷ் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-5-98) செவ்வாய்க்கிழமை நடைபெற்று பூதவுடல் 2 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக ஈச்சங்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நாகம்மா
(மனைவி)

உசன்,
மிருசுவில்,

(55940)

## கைலாசபதி இராசம்மா

(அளவெட்டி)

கைலாசபதி இராசம்மா 11-05-98 நேற்று காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற முன்னாள் ஆசிரிய கலாசாலை உபஅதிபர் பொ. கைலாசபதியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு கதிராசிப்பிள்ளையின் அன்பு மகளும், தோத்திரமலர் (ஆசிரியை, யா/ யூனியன் கல்லூரி), நடேசராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், சச்சிதானந்தம் (கிராம அலுவலர்), சுந்தரலிங்கம் (சுந்தரம் ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜனீர்தா, கோபிநாத், மேனகா, கஜன், கைலாசபதி, கோபிகா(மாணவர்கள் யா/மகாஜன கல்லூரி), துளசிகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கேணிக்கரை அளவெட்டியிலுள்ள இல்லத்தில் இன்று செவ்வாய்க்கிழமை (12-05-98) 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. சச்சிதானந்தம்
(மருமகன்)

கேணிக்கரை,
அளவெட்டி.

(55944)

## சுப்பிரமணியம் பத்மானந்தன்

நாச்சிமார் கோயிலடி தலையாழி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியில் குடும்பத்துடன் வசித்து வந்தவருமான சுப்பிரமணியம் பத்மானந்தன் ஜேர்மனியில் 10 — 05 — 1998 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பா சுப்பிரமணியம் திருமதி சின்னம்மா சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மகனும், நல்லூர் வடக்கு, கல்வியங்காடு கலைமகள் வீதி, திரு. செல்லத்துரை இராசையா (பத்தர்), திருமதி நல்லம்மா இராசையா ஆகியோரின் அன்பு மருமகனும் தவமலரின் அன்புக்கணவரும், சசிதேவி, விஜிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
செ. இராசையா
(மாமா)

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(55945)

## காத்தவராயன் கூத்து

திருநெல்வேலி, மே 12

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் இசை நாடக நாட்டுக்கூத்து போட்டியின் 3 ஆம் நாள் நிகழ்வில் இன்று செவ்வாய்க்கிழமை ஐந்து நாடக மன்றங்களின் காத்தவராயன் கூத்து யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். (ஐ-135)

## நாணயக்குற்றி தொலைபேசி

சாவகச்சேரி கண்டிவீதியில் சிவில் நிர்வாக அலுவலகத்தின் முன்பாக பொதுமக்களுக்கான நாணயக்குற்றி தொலைபேசி இணைப்பு கடந்த 5 ஆம் திகதி முதல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் இலகுவாக தமது உள்ளூர் வெளியூர் தொடர்புகளைப் பெற மேலும் வசதிகிட்டியுள்ளது.

இதேவேளை சாவகச்சேரி நகரில் தனியாருக்கான தொலைத்தொடர்பு வசதிகளும் தொலைத்தொடர்பு திணைக்களத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (ஐ-31)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், மே 12

சுன்னாகம் சூராவத்தை கலைமகள் சனசமூக நிலைய நூலகத் திறப்புவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சனசமூக நிலையத் தலைவர் ம. சகீந்திரன் தலைமையில் நடைபெற உள்ளது. இவ்விழாவில் வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவர் மா. செல்வராசா பிரதம விருந்தினராகவும் யாழ். மாவட்ட ஈ. பி. டி. பி.யின் துணைப் பொறுப்பாளர் கே. நிஷாந்தன், சுன்னாகம் ஈ.பி.டி. பி. அமைப்பாளர் பி. ஜோசெவ் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ள உள்ளனர். (ஐ-9)

யாழ்.
**றீகல்** வெண் திரையில்
இன்று 10-30, 2-30
அஜித், சிம்ரான் நடித்த
**அவள் வருவாளா**
(புதிய வெளியீடு)
செவ்வாய், புதன் வியாழன், வெள்ளி
அனைவரின் வேண்டுகோளுக்கிணங்க
காலை 8-30 மணிக்கு
TITANIC
இது ஒரு பரிதாப சம்பவம்
(55946)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
இன்று
விஜய், அஜித்குமார் சுவாதி நடித்த
ராஜாவின் பார்வையிலே
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
தொலை பேசி இல.
070 - 212223
(55326)

**நாகம்ஸ்**
சினிமா
சுன்னாகம்
அகல வெண் திரையில்
12-05-98
சரத்குமார், வினிதா நடித்த
பேண்டு மாஸ்ரர்
(பழைய நேரம்)
காட்சி 10-30 — 2-30
(55939)

## இத்தாவிலில் தையல் வகுப்பு

யாழ்ப்பாணம், மே 12

யாழ்ப்பாணம் வை. எம். சீ. ஏ. நிறுவனத்தினர் பளை இத்தாவிலில் புதிய தையல் பயிற்சி வகுப்பினை ஆரம்பித்துள்ளனர்.

பயிற்சிக்கான ஆரம்ப தின நிகழ்வுகளை பளைப் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி ஆரம்பித்துவைத்தார்.

யாழ். வை. எம். சீ. ஏ. நிறுவனத் தலைவர் டீ. ஆர். அருமைநாயகம், உப தலைவர் எஸ். பி. ஜீவானந்தம் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பளை படையணியைச் சேர்ந்த லெப். அபேசேகரா பயிற்சிநெறியினை நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

இப் பயிற்சிநெறியில் முப்பது யுவதிகள் பயில்வதாக பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர் ம. அழகேந்திரன் தெரிவித்தார். (இ-117)

## புரண்ட பஸ் மீட்பு

வழுக்கியாற்று வயலில் புரண்ட வடபிராந்திய போக்குவரத்து பஸ் நேற்று முன்தினம் மாலை படையினரால் பாரம் தூக்கி இயந்திரம் மூலம் தூக்கி எடுக்கப்பட்டது. (இ-139)

## மெய்வன்மை போட்டிகள்

யாழ்ப்பாணம் கல்வி வலயம் 1 இன் மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி விளையாட்டுத் திடலில் நடைபெறவுள்ளன. முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் கல்வி வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளர் நா. சுந்தரலிங்கம் கலந்து கொள்வார். (உ)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கத்தின் செயலாளர்

சண். தயாளன்

அவர்களின் அன்புத் தாயார்

திருமதி

**இரத்தினம் சண்முகம்**

அவர்களுக்கு

எங்களது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிப்பதோடு அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ். மாவட்ட
அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம்,

(சி/3931)

## கண்ணீர் அஞ்சலி

**எஸ். தனபாலசிங்கம்**

அம்பாள் ஸ்ரோர்ஸ் உரிமையாளரும்,
நல்லூர் வணிகர் கழகத் தலைவரும்,
திருநெல்வேலி
வர்த்தக பாதுகாப்புச் சேவைத் தலைவருமாகிய
எஸ். தனபாலசிங்கம் (அம்பாள்) அவர்கள்
நேற்று (11-05-98) இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

திருநெல்வேலி
வர்த்தக பாதுகாப்புச் சேவை

(55942)

ESTD:- 1973 REGD:- No J/7993
**The Express Institute**
IRUPALAI - KOPAY.
வெள்ளி விழா தொடர்பான
போட்டிகளில் இறுதி நிகழ்வான
**மரதன் ஓட்டப் போட்டி**
16-05-98 காலை 6.30 மணிக்கு
இடம்பெறும்.
பெயர்களைப் பதிவுசெய்த பழைய மாணவர்கள் 14 ஆம் திகதிக்கு முன் தங்களுக்கு உரிய இலக்கங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.
(55947) - வெள்ளி விழாக் குழுவினர்

## கண்ணீர் அஞ்சலி

திருநெல்வேலி அம்பாள் ஸ்ரோஸ் உரிமையாளர்

**எஸ். தனபாலசிங்கத்தின்**

திடீர் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கணேசன் ஸ்ரோஸ்
(திருநெல்வேலி, சந்தை)

30/5 பசல்ஸ் லேன்,
வெள்ளவத்தை,
கொழும்பு-6.

(சி/3728)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட அயர்லாந்து ஒப்பந்தம்
# ஐ. ஆர். ஏ. அங்கீகரித்தது

லண்டன், மே 12

வட அயர்லாந்து தொடர்பான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சமாதான ஒப்பந்தத்தை ஐ. ஆர். ஏ. இயக்கத்தின் அரசியல் பிரிவான சின்பீன் உத்தியோக பூர்வமாகஅங்கீகரித்துள்ளது.

விசேட கட்சி மகாநாடு ஒன்றில் 95 சதவீத வாக்குகளின் ஆதரவுடன் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளும் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

இதன் பிரகாரம் ஏப்ரல் மாதம் 10 திகதி செய்து கொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தத்தை பிரிட்டிஷ் சார்புடைய பிரதான புரட்டஸ்தாந்துபிரிவினரும்தேசியவாத கத்தோலிக்கக் கட்சியினரும் அங்கீகரித்துள்ளனர்.

சமாதான ஒப்பந்தம் தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு இந்தமாதம் 22 ஆம் திகதி ஒரே சமயத்தில் வட அயர்லாந்திலும், அயர்லாந்திலும் நடத்தப்பட இருக்கின்றன. (இ-6)

# பிரதமர் உறுதியுடன் செயற்பட வேண்டும்
## ஹெக்டே கோரிக்கை

புதுடில்லி, மே 12

நியாயமற்ற கோரிக்கைகள் எழுப்பப்படும்போது பிரதமர் வாஜ்பாய் கண்டிப்புடனும் உறுதியுடனும் நடந்துகொள்ள வேண்டும் என்றும் —

தேவைப்பட்டால்நாடாளுமன்றத்தின்பட்ஜெட்கூட்டத் தொடரின் பின் அமைச்சரவையைக் கூட மாற்றி அமைக்க வேண்டும் என்றும் — மத்திய வர்த்தகத்துறை அமைச்சரும் லோக் சக்தித் தலைவருமான ராமகிருஷ்ண ஹெக்டே தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அவரளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆயினும் அவர் எந்தவொரு சம்பவத்தையோ நிகழ்வையோ குறிப்பிட்டுக் கூறவில்லை. பதவி விலக வேண்டும் என்று அ.தி.மு.க பொதுச் செயலர் ஜெயலலிதாவால் வற்புறுத்கப்படும் இரு அமைச்சர்களில் ஹெக்டேயும் ஒருவர்.

மத்திய சட்டத்துறை அமைச்சரும் அ.தி.மு.க உறுப்பினருமான தம்பித்துரைஜெயலலிதாவுக்கு எதிரான வழக்குகள் அரசியல் சார்ந்தவை என்று கூறிய கருத்துப்பற்றி ஹெக்டேயிடம்கேட்ட போது:

நான் சட்ட அமைச்சராக இருந்திருந்தால் இது மாதிரிக் கருத்துக்களைத் தெரிவித்திருக்க மாட்டேன் என்று கூறினார்.

ஜெயலலிதா மீதான வழக்குகளைக் கவனித்து வரும் மத்திய அரசு வழக்கறிஞர்களை அகற்றியது நிர்வாகத்தின் தார்மீக நெறிமுறைகளை மீறியதாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (இ-6)

# குண்டு வெடிப்புடன் பிலிப்பீன்ஸில் வாக்களிப்பு

மணிலா, மே 12

பிலிப்பீன்ஸில் புதிய அதிபரைத் தேர்ந்தெடுக்கும் வாக்குப் பதிவுகள் நேற்று தொடங்குவதற்கு முன்னர் வட பகுதியில் உள்ள இரு நகரங்களில் இரு வாக்குச் சாவடிகளில் குண்டுகள் வெடித்தன.

சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

வாக்குச் சாவடிகள் மாற்றப்பட்டு றடை மற்றும் லொவோநகர்களில் வாக்குப் பதிவுகள் இயல்பாக நடந்ததாக பொலிஸார் கூறினார்கள். (இ-3)

# இந்தோனேசியாவில் டெங்குக் காய்ச்சல்
## 800 பேர் இதுவரை மரணம்

ஜகார்த்தா, மே 12

இந்தோனேசியாவில் டெங்குக் காய்ச்சலினால் 800 பேர் வரை இறந்துள்ளனர். 32 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தோனேசியாவின் 27 மாகாணங்களில் 12 மாகாணங்களில் டெங்குக் காய்ச்சல் பரவி வருகிறது.

சில மாகாணங்களில் உள்ள மருத்துவமனைகளில் கடுமையான உணவுப் பற்றாக்குறை நிலவுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-6)

உலக அரங்கில்

# ஆயரின் மரணச்சடங்கு பாகிஸ்தானில் பதற்றம்

இஸ்லாமாபாத், மே 12

மதஅவதூறுக் குற்றச் சாட்டின் பேரில் பாகிஸ்தானிய கிறிஸ்தவர் ஒருவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டதை ஆட்சேபித்து நீதி மன்றத்துக்கு முன்னே தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்ட ஆயர் ஜோன் ஜோசப்பின் இறுதிச் சடங்குகள் நேற்று முன்தினம் பாகிஸ்தானின் பைசலாபாத் நகரில் நடைபெற்றன.

இந்த இறுதிச்சடங்கில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் கலந்து கொண்டனர்.

இறுதிச் சடங்கின் போது வெள்ளை உடை அணிந்த கிறிஸ்தவக் கன்னியாஸ்திரிகள் கண்ணீர் மல்கப் பாடல்களைப்பாடினர்.

இந்த நிகழ்வின் பின்னர் பாகிஸ்தானில் வாழும் கிறிஸ்தவர்கள் அனைவரும் ஒன்று கூடித் தற்போது பாகிஸ்தானிலுள்ள மத அவழிதிப்புச் சட்டம் ரத்துச் செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

ஆயினும் பைசலாபாத்திலுள்ள கடும் போக்கிரு இஸ்லாமியக் குழுக்கள் இந்தச் சட்டம் நடைமுறையில் இருக்க வேண்டும் என்றும் மத அவதூறுக் குற்றவாளிகள் என்று காணப்படுவோர் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டு வருகின்றன.

இதேவேளை ஆயரின் இறுதிச் சடங்குகள் நடந்து கொண்டிருந்த போதுநூற்றுக்கணக்கானஇஸ்லாமியத் தீவிரவாதிகள் பாகிஸ்தான் கிறிஸ்தவர்கள் வாழும் பகுதிக்குச் சென்று அவர்களின் ஒருடசின் வீடுகளுக்கும் கடைகளுக்கும் தீ வைக்க முயன்றனர்.

அத்துடன் இயேசு நாதரின் திருவுருவப் படம் ஒன்றின் மீதும் கற்களை வீசிச் சேதப்படுத்தியதுடன் பைபிள்களையும் கிழித்து எறிந்தனர். (இ-6)

# இயற்கை அழிவு ஏற்படும் போது அமெரிக்கப்படை பங்களாதேஷ் வரும்
## இரு நாடுகளும் பேச்சு நடத்துகின்றன

டாக்கா, மே 12

பங்களாதேஷில் அமெரிக்கப் படைகள் செயற்பட இடமளிக்கும் விதத்தில் இரு நாடுகளுக்கிடையேயும் பேச்சுவார்த்தை நடத்தப்படுகின்றது.

ஐ. நா வுக்கான அமெரிக்கத் தூதுதர் பில் றிச்சர்ட்சன் மற்றும் ஜெனரல் ஸ்ரெனில் ரெய்மர் ஆகியோர் பங்களாதேஷுக்கு விஜயம் செய்தபோது இது தொடர்பான நகல் ஒப்பந்தம் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இந்த ஒப்பந்தம் இயற்கை அழிவுகள் ஏற்படும் காலங்களில் அமெரிக்கத் துருப்புக்கள் சென்று பணியாற்றுவதற்கு இடமளிக்கும் என்றும் —

இதனை இராணுவக் கூட்டு ஒப்பந்தமாக எவரும் கருதிவிடக்கூடாது என்றும் — பங்களாதேஷ் அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்கா நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுடன் இதுபோன்ற ஒப்பந்தங்களைச் செய்து கொண்டுள்ளது என்றும் அவர்கூறினார். (இ-6)

# மருத்துவத் தாதியர் வேலை நிறுத்தம் டில்லியில் ஆஸ்பத்திரிகள் ஸ்தம்பிதம்

புதுடில்லி, மே 12

இந்தியாவின் தலைநகரான புதுடில்லியில் மருத்துவத் தாதிமார்களின் வேலை நிறுத்தத்தால் வைத்தியசாலைகளில் வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

வேலை நிறுத்தத்தை முறியடிக்கும் நோக்கத்துடன் இந்திய அரசு 13 தாதிமார்களை வேலை நீக்கம் செய்துள்ளது.

மேலும் 11 ஆயிரம் தாதிமார்களை கைதுசெய்து சிறையில் அடைக்கப் போவதாக அரசு அச்சுறுத்தி உள்ளது.

வேலை நிறுத்தம் காரணமாக புதுடில்லியில் உள்ள வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள மோசமான நிலைமையைச் சமாளிப்பதற்காக இராணுவவைத்தியசாலையில் உள்ள தாதிமார்களையும் அயல் மாநிலங்களில் பணிபுரியும் தாதமார்களையும் கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்று சுகாதாரத் துணை அமைச்சர் தலித் எழில்மலை தெரிவித்துள்ளார்.

32 அரச மருத்துவமனைகளும் நூற்றுக்கணக்கான சிறிய மருந்தகங்களும் தாதிமார் வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் கூறினார். (இ-6)

வசாவிளான்
சீமான் றப்பியேலின் மகள்
தொடர்பு கொள்ளவும்

வசாவிளான் சந்தியோமையோர் கோயிலடியைச் சேர்ந்த சீமான் றப்பியேலின் மகளான நேசம்மாவை கொழும்பிலிருந்து தற்சமயம் வந்து ஊர்காவற்றுறை, கரம்பொன், விற்றில் பிளவர் கொண்வென்றில் தங்கியுள்ள செல்வி கனசசூரியர் தேடுகின்றார். உடன் மேற்படி முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

(55935)

மீண்டும் யாழ். நகரில் இதோ அறிமுகமாகிறது

சமுர்த்தி

கீரீடா

ஷ்ரம வாசனா

ரிக்கற்றில் குறித்த விலையுடன் யாழ். நகரில் வலம் வருகிறது. தேசிய லொத்தர் சபைக்கு சொந்தமான அதிர்ஷ்டங்கள் யாழ். நகரிலும் விற்பனை செய்யும் உரிமையுடன் உலாவருகிறது. உங்களுக்குரிய அதிர்ஷ்டங்கள் உடனுக்குடன் பணமாக பெற்றுத்தரப்படும். உங்கள் அதிர்ஷ்டம் உங்கள் கைகளில்.

ஏக விநியோகஸ்தர்கள்:

வேளாங்கன்னி விற்பனை அகம்

இல. 5, வைரவர் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:

ஜெ. சதீஸ்[illegible] ([illegible]) 309, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (55937)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி நெருக்கடியை எதிர்நோக்கும் ப. நோ. கூ. சங்கங்களுக்கு உதவி

## அமைச்சுச் செயலர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 12
யாழ். மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. சங்கங்கள் எதிர்நோக்கும் நிதி நெருக்கடியைத் தீர்க்க மக்கள் வங்கி ஊடாக உதவ நடவடிக்கை எடுப்பதாக கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சுச் செயலாளர் அன்ரன் அல்பிரட் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் கூட்டுறவு அமைப்புக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள், கூட்டுறவு அபிவிருத்தி ஆகியன தொடர்பாக நேரில் ஆராய்வதற்காக அவர் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு அமைப்புப் பிரதிநிதிகள், மக்கள் வங்கிப் பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்துரையாடினேன். தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அவர்கள் பல கோரிக்கைகளை முன்வைத்தனர்.

கூட்டுறவு அமைப்புக்களின் நிதி நெருக்கடி, தனியான கப்பல் வசதி, வீரசிங்கமண்டபத்தைப் புனரமைத்தல் ஆகியன முக்கிய கோரிக்கைகள் ஆகும்.

கொழும்பு சென்றதும் அமைச்சருடன் பேசி இந்த விடயங்களுக்கு முன்னுரிமை அளிப்பேன்— இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ-3)

## ப. நோ. கூ. சங்க இழப்புக்களை அரசு பொறுப்பேற்க கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 12
1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் யுத்தம் காரணமாகவும், இடம்பெயர்வு காரணமாகவும் ப. நோ. கூ. சங்கங்களுக்கு ஏற்பட்ட இழப்பீட்டை அரசு பொறுப்பேற்க வேண்டும்.

யாழ் வந்துள்ள கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு செயலாளர் அன்ரன் அல்பிரட்டிடம் மேற்கண்டவாறு கோரப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்வோர் கூட்டுறவுச்சமாச மண்டபத்தில் நடைபெற்ற கூட்டுறவாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. சண்முகநாதன் தலைமையில் நேற்று முன்தினம் நடந்த இச்சந்திப்பில் ப. நோ. கூ. சங்கத் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், கூட்டுறவு துறை சார்ந்தவர்கள் பங்குபற்றினர்.

கூட்டுறவாளர்கள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகள் குறித்து எடுத்து விளக்கப்பட்டது.

அமைச்சுச் செயலாளர் அன்ரன் அல்பிரட்டிடம் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் வருமாறு:-

★ கூட்டுறவு அமைப்புகள் கொழும்பில் இருந்து உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்துவர தனியான கப்பல் ஒன்றை ஏற்பாடு செய்ய வேண்டும்.

★ கூட்டுறவு அமைப்புக்களுக்கு வட்டியில்லா இலகு கடன் வசதி செய்ய வேண்டும்.

★ தற்சமயம் சேதம் அடைந்த நிலையில் உள்ள வீரசிங்கம் மண்டபத்தைப் புனரமைக்க நிதி வழங்க வேண்டும்.

★ யாழ். மாவட்டத்தில் உள்ள சகல ப. நோ. கூ. சங்கங்களுக்கும் தொலைபேசி வசதி கொடுக்க வேண்டும்.

★ கூ. மொ. விற்பனை நிலையத்தில் காசோலைக்கு பொருள் பெற ப. நோ. கூ. சங்கங்களுக்கு வசதி அளிக்க வேண்டும்.

★ யாழ். பிரதான வீதியில் உள்ள யாழ். ப. நோ. சங்கத்தின் கட்டடத்தை கூ.மொ.வி. நிறுவனத்திடம் இருந்து மீளப்பெற ஏற்பாடும் செய்யவேண்டும்.

[இ-13-7]

## தீவுப்பகுதியின் பாதுகாப்பு கடற்படையினரிடம்

தீவுப்பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் வாபஸ் பெறப்பட்டு, அப் பகுதிப் பாதுகாப்பு கடற் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தீவுப்பகுதியின சகல இடங்களிலும் 514 ஆவது படையினர் நிலைகொண்டு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற் கொண்டு வந்தனர்.

அந்த படையினர் வாபஸ் பெறப்பட்டு வன்னி யுத்த முனைக்கு அனுப்பப்பட்டதாலேயே கடற்படையினர் சகல இடங்களிலும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

காரைநகர், நெடுந்தீவுப் பகுதிகளில் ஏற்கனவே நிலைகொண்டிருந்த கடற்படையினர் தற்சமயம் பண்ணைப் பாலம் வரை பணியில ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

(இ-3-111)

## காயம்

யாழ்ப்பாணம் மே 12
பூங்காவன உற்சவ நிகழ்ச்சிக்காக அலங்கார வேலையில் ஈடுபட்டிருந்த ஒருவர் சுமார் 12 அடி உயரத்தில் இருந்து தவறிவிழுந்து காயமடைந்தார்.

பொலிகண்டி சமரபாகு நாச்சியம்பாள் ஆலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் வதிரியைச் சேர்ந்த வைரமுத்து ஸ்ரீஸ்கந்தராசா (வயது 48) எனபவரே தலைப் பகுதியில் காயமடைந்தவராவார்.

இவர் இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளையில் லிகிதராகக் கடமைபுரிபவர்.

காயமடைந்தவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(இ-15)

# இசை தெய்வீகமானது; அதனை அழியாது பாதுகாக்க வேண்டும்

## மாதாந்த இசை நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம், மே 12
''எமது இசை தெய்வீகமானது இறைவழிபாட்டுடனும், மங்கள நிகழ்ச்சிகளுடனும் தொடர்புபட்டுள்ள இசையை அழியாது பாதுகாக்க வேண்டும். இவ்வாறான இசை நிகழ்வுகள் இன்றைய சூழ்நிலையில் அவசியமானவை. இவற்றின் மூலம் இசை வளர்ச்சி ஏற்பட வழி பிறக்கும்.''

இவ்வாறு இலங்கை இசை வேளாளர் சங்கத்தின் ஆதரவில் இடம்பெற்ற மாதாந்த இசை நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துரையாற்றிய யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் கலாநிதி சபா. ஜெயராஜா கூறினார்.

இணுவில் இளந்தொண்டர்சபை மண்டபத்தில் எஸ். ஆர். ஞானசுந்தரம் தலைமையில இடம்பெற்ற இந்த இசை நிகழ்வில் இவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இன்றைய இசை நிகழ்வில் மகாவித்துவான் பட்டம் பெற்ற வீரமணிஐயா அவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறுவது பெரிதும் பாராட்டுதற்குரியது. எத்தனையோ உருப்படிகளை உருவாக்கியும், தெய்வீக சாகித்தியங்களை இயற்றியும், நாட்டிய நாடகங்களை தயாரித்தும் இசைத்துறைக்கு பணியாற்றிய வீரமணிஐயா அவர்களை பாராட்டுவது மிகவும் — பொருத்தமான ஒன்று.

தவில் மேதை தெட்சணாமூர்த்திக்குப்பின் எமது நாட்டுக்குப் பெருமை தேடித் தந்தவர் வீரமணிஐயா அவர்கள்.

இசைத்துறைக்கு பணியாற்றும் அவரை இசைக் கலைஞர்கள் பாராட்டி கௌரவிப்பது மிகவும் பொருத்தமானது என்றார்.

விழாவுக்குத் தலைமை வகித்த எஸ். ஆர். ஞானசுந்தரம் பேசுகையில்:-

பாரம்பரியமான கர்நாடக இசையை அழியாது பாதுகாக்கவும், மக்களிடையே ரசிகத்தன்மையை வளர்க்கவும் எமது சங்கம் இது போன்ற இசை நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்து நடத்தி வருகிறது.

ஆனால் அரசாங்க உதவிகளோ, வேறு எந்த உதவிகளோ இன்றி சங்க உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் மட்டுமே இவை நடைபெறுகின்றன.

எமது கலை, கலாசாரங்களை பேணிப்பாதுகாப்பதற்கு இசையாளர்கள் ஆற்றும் பணி மகத்தானது. அதை அரசாங்கமோ மற்றும் நிறுவனங்களோ ஏற்று உதவிகளை வழங்க முன்வருவதில்லை. காலப்போக்கில் இவ்வாறான உதவிகளை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என்றார்.

மகாவித்துவான் பட்டம் பெற்ற வீரமணி ஐயா அவர்களுக்கு இசைவேளாளர் சங்கத்தின் சார்பில் எஸ். ஆர். ஞானசுந்தரம் பொன்னாடை போர்த்தி மாலை சூட்டி கௌரவித்தார். ஏனைய கலைஞர்களும் மாலை அணிவித்து கௌரவித்தனர்.

இசை நிகழ்வில் கோண்டாவில் கானமூர்த்தி குழுவினரின் மங்கள இசையும், செல்வி பிரமா கணேசனின் கர்நாடக இசைக் கச்சேரியும் இடம்பெற்றன.

(இ)

## தேசிய கல்விக் கல்லூரி

# விண்ணப்பம் சேகரித்து அனுப்ப ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 12
தேசிய கல்விக் கல்லூரியில் சேர விண்ணப்பிப்பவர்களின் விண்ணப்பங்களை சேகரித்து பரீட்சை ஆணையாளருக்கு அனுப்ப யாழ். கல்வி வலயம் ஒன்று அலுவலகம் ஏற்பாடு செய்துள்ளது.

தேசிய கல்விக் கல்லூரிக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கல்வி, உயர்கல்வி அமைச்சால் கோரப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பங்கள் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளருக்கு கிடைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு இவ்விண்ணப்பங்கள் சேகரித்து பரீட்சை ஆணையாளருக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் —

எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை கல்வி வலயம் ஒன்று அலுவலகத்தில் ஒப்படைக்கலாம் என்றும் — வலயம் ஒன்று கல்விப்பணிப்பாளர் நா. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

இ-3)


## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச வணிக கழகத்தலைவரும்
திருநெல்வேலி வர். பாதுகாப்புச் சேவை
சங்கத் தலைவரும்
ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ் உரிமையாளருமாகிய

**சு. தனபாலசிங்கம் (சந்திரன்)**

அவர்களின் திடீர் மறைவினால் கலங்கியிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

ஐங்கரன் களஞ்சியம், திருநெல்வேலி.
குமரன் ப.ச. மாளிகை, திருநெல்வேலி.

(55936)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

**சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையின்
நலன்புரிச் சங்கத்தால்**

29 - 03 - 98 நடத்தப்பட இருந்து தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்ட சீட்டிழுப்பு வைபவம் திட்டமிட்டபடி 10-05-98 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது. அச் சீட்டிழுப்பில் பரிசு பெற்ற இலக்கங்கள்:

1. முதலாம் பரிசு 1120
2. இரண்டாம் பரிசு 3043
3. மூன்றாம் பரிசு 1292

பரிசிலுக்கு உரியவர்கள் பற்றுச்சீட்டை சமர்ப்பித்து பரிசில்களை பாடசாலை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

தலைவர்,
நலன்புரிச் சங்கம்.

[55930]

## விண்ணுலக வாழ்வில் 31 ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு: 15 — 07 — 1940



உதிர்வு: 12 — 04 — 1998

**அமரர் செல்லையா சிங்கராஜா**
(சேவி கண்ணாடி தொழிற்சாலை லொறி சாரதி)
(நீர்வேலி)

பண்புடனும் பாசத்துடனும் எம்மை
கண் போல காத்த தந்தாய்
இறை மகன் உயிர்ப்பு நாளில்
இறையடி சேரவென்றே — ஒரு
பேறு ஒன்று கிடைத்ததுவோ!
மாதம் ஐந்து முன்னதாய் உம்
தம்பியை இழந்த துன்பம்
பொறுக்காது போனீரோ
விண்ணுலகை நோக்கி...

அன்னாரின் ஆத்ம சாந்திக்கான திருப்பலி இன்று (12-05-98) செவ்வாய் காலை 11.00 மணிக்கு கோப்பாய் புனித மரியாள் ஆலயத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்,

இவரது பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்
கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு.

[55928[


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்கள் சக்திக் கழகம்
# ஓர் அரசியல் கட்சி அல்ல!

## அதன் செயற்பாடுகள் குறித்து விளக்கம்

யாழ்ப்பாணம், மே 12

''மக்கள் சக்திக்கழகம் ஓர் அரசியல் கட்சி அல்ல. மக்களின் பிரச்சினைகளை உயர் மட்டத்துக்கு தெரியப்படுத்தி அவர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதே இக்கழகத்தின் நோக்கம்''

அண்மையில் உருவாக்கப்பட்ட மக்கள் சக்திக் கழகத்தின் செயற்பாடுகள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் அந்தக் கழகத்தின் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கழகத்தின் செயற்பாடுகள் குறித்து விளக்க அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் சக்திக்கழகம் ஒரு சுதந்திரமான பிரதேச இன, சாதி, சமய சார்பற்ற அமைப்பாகும். இக்கழகம் நடவடிக்கை எடுக்க வேண்டிய பிரச்சினைகள் பற்றி சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினருடனும் தேவைக்கேற்ப தொடர்பு கொண்டு செயற்படும். எந்த அரசியல் கட்சிப் பின்னணியும் இல்லாமல் செயற்படும் அமைப்பு இதுவாகும்.

மக்களது மனித உரிமை, ஜனநாயக உரிமை, அடிப்படை உரிமை, கௌரவம் ஆகியன குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதுடன் அவர்களது கடமைகளையும், கூட்டுப்பலத்தையும் ஒருங்கிணைத்துச் செயற்படுத்த அமைப்பு பாடுபடும்.

அரச, பொதுத்துறை நிறுவனங்களில் நிலவும் ஊழல், முறைகேடுகள் அசமந்தப் போக்கு, அதிகாரத்துஷ்பிரயோகம், எதேச்சாதிகாரம், அத்துமீறல், விரயம், சிக்கனமின்மை போன்றவற்றை இனங்கண்டு வெளிக்கொணர்ந்து பகிரங்கப்படுத்துவது கழகத்தின் பணிகளில் ஒன்று. அதன் மூலம் மக்களுக்கு உதவுவதே முக்கிய நோக்கமாகும்.

சகல பொதுத்துறை வர்த்தக நிறுவனங்களும், தனியார் வர்த்தக நிறுவனங்களும் மக்கள் கருத்துக்கு மதிப்பளித்து செயற்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். கலாசார சீரழிவுகளை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் எதிராகக் குரல் கொடுப்பதும் அவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதுடன் மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்த பாடுபடுவதும் இந்தக் கழகத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்தக்கழகத்தின் செயற்பாடுகளை குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் மக்கள் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

இப்படி அவர் தெரிவித்தார். (ஐ-3)

# கூட்டுப்படைத் தளபதி முறை மீண்டும் அமுலுக்கு வரும்?

கொழும்பு, மே 12

முப்படைகளையும் உள்ளடக்கிய கூட்டுப்படைத் தளபதி ஒருவரை நியமிக்க அரசு திட்டமிட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

முப்படை கட்டமைப்பில் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ள மாற்றங்களின் போதே மூன்று படைப் பிரிவையும் ஒருவரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரும் விதத்தில் இந்தப் பதவி சிரேஷ்ட தளபதி ஒருவருக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் தற்போது இது போன்றதொரு அமைப்பே நடைமுறையில் உள்ளது. இதனைப் பின்பற்றியே இங்கும் முப்படைகளுக்கும் தலைமை வகிக்கும் விதத்தில் சிரேஷ்ட தளபதி ஒருவரை நியமிப்பதற்கான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே ஜனாதிபதி பிரேமதாசவின் ஆட்சிக் காலத்திலும் இது போன்ற நடைமுறைஇருந்து பின்னர் அது நீக்கப்பட்டது.

இந்தப் புதிய நியமனத்தின் மூலம் கூட்டுப்படைத் தளபதியின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இராணுவ, விமானப்படை, கடற்படை நிர்வாகம் கொண்டு வரப்படும். (இ-10)

# நல்லூர் செயலர் பிரிவில் மீளக் குடியமர்வுப்பணம்

யாழ்ப்பாணம், மே 12

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் 160 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்வுக் கொடுப்பனவான 5ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் நல்லூர் பிரதேச செயலர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர் பிரிவுகளில் பெரும் எண்ணிக்கையான குடும்பங்களைக் கொண்ட இப்பிரதேச செயலர் பிரிவில் ஒரு குறிப்பிட்ட தொகையினருக்கே இது வரை மீளக் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## எயர் லங்கா தொடர்பான
# நாடாளுமன்ற விவாதம் ரூபவாஹினியில் அஞ்சல்

கொழும்பு, மே 12

எயர் லங்கா நிறுவனத்தின் பங்குகளை வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு விற்பனை செய்தமை தொடர்பாக எதிர்வரும் 19 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம் பெறும் விவாதம் ரூபவாஹினியில் நேரடியாக அஞ்சல் செய்யப்படவிருக்கிறது.

இந்த விவாதத்தை எம். ரி. வி. மற்றும் ரி. என். எல் தொலைக்காட்சிகளிலும் அஞ்சல் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று ஐ. தே. க. சபாநாயகரைக் கேட்டுள்ளது.

இது தொடர்பாக ஆராய சபாநாயகர் தலைமையில் நாளை கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கிறது. (இ-3)

# கோழி திருட்டு அதிகரிப்பு

அரியாலை, மே 12

யாழ். ஈச்சமோட்டைப் பகுதியில் கோழித் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன.

சென்ற வாரம் ஈச்சமோட்டை பிரதான வீதியில் உள்ள வீடு ஒன்றில் கூட்டில் இருந்த 27 கோழிகள் இரவு வேளையில் திருடப்பட்டுள்ளன. (இ-17-9)

# படையினருக்கான மன்னிப்புக் காலம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுடன் முடிவு

## கைதாவோருக்குக் கடும் தண்டனை

கொழும்பு, மே 12

இராணுவத்தை விட்டுத் தப்பியோடியவர்களுக்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்புக் காலம் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் முடிவடைந்துள்ளது.

இக்காலப் பகுதிக்குள் மீண்டும் சேவையில் சேரத் தவறியவர்களைக் கண்டுபிடித்து கைதுசெய்ய விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகப் பாதுகாப்புஅமைச்சு அறிவித்துள்ளது.

கைது செய்யப்படும் படைவீரர்கள் இராணுவ முறைப்படி தண்டிக்கப்படுவார்கள் என இராணுவத் தலைமை அலுவலகத்தின் நிர்வாகப் பணிப்பாளர் கூறியுள்ளார்.

பொதுமன்னிப்புக் காலத்துக்குள் திரும்பிவரும் படைவீரர்கள் முன்னர் வகித்த பதவிகளிலேயே மீண்டும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் அவர்களுக்கான சம்பளங்களும் வழங்கப்படும்.

அரசாங்கம் வழங்கிய வேண்டுகோளுக்கு செவிசாய்த்து அதிகமானோர் மீண்டும் படையில் சேர முன்வந்துள்ளார்கள் என்றும் —

வடக்கு - கிழக்கு யுத்தத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் சமாதானத்தை நிலைநாட்ட தேசியப் பற்று வாய்ந்த படை வீரர்களின் சேவை அத்தியாவசியமானது என்பதால் இராணுவத்தை விட்டுச் சென்ற அனைவரும் நாட்டின் நலன் கருதி மீண்டும் இராணுவ சேவையில் இணையவேண்டும் என்றும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாத்தறை கொடுகம பகுதியில் குளாய்நீர் விநியோகத் திட்டமொன்றை அங்கு ஆரம்பித்து வைத்த பின்னர் அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார். (இ-9)

# 5 வருடங்களின் பின் திருமலையில் வெசாக்

திருகோணமலை, மே 12

திருகோணமலை மாவட்டத்தில் 5 வருட இடைவெளிக்குப் பின்னர் வெசாக் கொண்டாட்டங்கள் இடம் பெறுகின்றன.

பாதுகாப்புக் காரணங்களுக்காக கடந்த 5 வருடங்கள் மத வழிபாடுகளுடன் மட்டுமே வெசாக் கொண்டாடப்பட்டு வந்தது.

இம்முறை மத வழிபாட்டுடன் பொதுச் சந்தைப் பகுதியில் பிரமாண்டமான அளவில் வெசாக் பந்தலும் அமைக்கப்பட இருக்கின்றது.

விசேட நிகழ்ச்சிகளும் ஏற்பாடகியுள்ளன.

பண்டிகைக் காலத்தில் பெரும் சனக்கூட்டம் நகரில் கூடும் என எதிர்பார்க்கப்படுவதால், கொலராவால் அவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக விசேட அறிவுறுத்தல் சுகாதாரப் பகுதியினரால் விடுக்கப்பட்டுள்ளது.

ஒலி பெருக்கி மூலம் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது. (இ-3)

# செய்திக் கொத்து

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மே 12

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று முற்பகல் 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் செ. சிவநடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழகப் பதிவாளர் க. குணராசா கலந்து கொள்வார். (இ-8)

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 12

நல்லூர் பிரதேச சபை நடத்தும் மாதாந்தக் கருத்தரங்கு இன்று செவ்வாய் பிற்பகல் 3.30 மணியளவில் கொக்குவில் உப அலுவலக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

மேற்படி கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறையைச் சேர்ந்த வருகை நேர விரிவுரையாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ''சமூகமும் இளைஞர் கல்வியும்'' என்னும் பொருளில் கருத்துரை வழங்குவார். (இ-7)

### கோழிகளுக்கு நோய்

அரியாலை, மே 12

யாழ். மாவட்டத்தில் கோழிகளுக்கு ஒருவித தூக்க நோய் பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நோய்க்கு உள்ளான கோழிகளைப் பலர் சந்தைகளில் விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டுவதாகவும்—

இறைச்சிக்காக கோழிகளை வாங்குவோர்கள் அவதானமாக இருக்குமாறும்—

சுகாதாரப் பிரிவினர் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளனர். (இ-9-17)

### மின்பிறப்பாக்கி அன்பளிப்பு

மூளாய், மே 12

மூளாய் சித்திவிநாயகர் ஆலயத்துக்கென புதிய மின்பிறப்பாக்கி ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

ச. சகாதேவன் என்பவரினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட மேற்படி மின்பிறப்பாக்கி சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியானது என்று தெரிவிக்கப்பட்டது. (இ-99-9)

### புதிய தபாற் பெட்டி

சுழிபுரம், மே 12

பண்ணாகம் ஆலடி வைரவர் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள மாதர் அபிவிருத்திச் சங்க மண்டபத்துக்கு முன்னால் புதிய தபாற் பெட்டி ஒன்றை வைக்க சுழிபுரம் தபாலதிபர் ஏற்பாடு செய்துள்ளார். (இ-28-9)

### விளையாட்டு நிகழ்வுகள்

ஊர்காவற்றுறை, மே 12

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் ஊர்காவற்றுறை பொது மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் கலந்து கொள்வார். (இ-16-7)

### மண்வெட்டி விநியோகம்

தென்மராட்சி, மே 12

உலக உணவு நிறுவனத்தினால் 500 மண்வெட்டிகள் பளை விவசாயத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டன.

இவை இப்பகுதி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருவதாக பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார். (இ-117-9)

### வைத்திய அதிகாரி மீண்டும் வருகை

வலி. வடக்கு, மே 12

மனநோய் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி தயா சோமசுந்தரம் தனது உயர்கல்வியை முடித்துக் கொண்டு மீண்டும் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இவர் மீண்டும் தனது கடமையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றில் மேற்கொண்டு வருகின்றார். (இ-86-9)

### முத்திரைக்கு உலர் உணவு

அரியாலை, மே 12

இடம்பெயர்ந்த மக்களுக்கான 61 ஆவது ஏ. பீ. உலர் உணவு முத்திரையின் புள்ளிகளுக்கு யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைகள் ஊடாக நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. (-17-9)

### வர்ணம் பூசுதல்

நெல்லியடி, மே 12

மந்திகை மருத்துவ மனையின் சில விடுதிகள் மாலுசந்தி இராணுவத்தினரால் வர்ணம் பூசி அலங்கரிக்கப்பட்டு வருகின்றன.

வடமராட்சி சிவில் நிர்வாக இணைப்பதிகாரி பிரிகேடியர் எல். ஏ. ஆர். விஜயரட்ணாவின் ஏற்பாட்டிலேயே, மனநோய் விடுதி, பெண்கள் சத்திர சிகிச்சை விடுதிபோன்றவைகளுக்குவர்ணம் பூசும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (இ-109-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், மின் உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 83/7, தஞ்சிலேன், அரசடி வீதி, யாழ்ப்பாணம். [55918]

### தவறிவிட்டது

சுகிதா இராமச்சந்திரன், பலாலி வடக்கு, பலாலி ஆகிய எனது தேசிய அடையாளஅட்டை (818630290V) தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் V. இராமச்சந்திரன், ஞானவைரவர்வீதி உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய் என்னும் முகவரிக்கு ஒப்படைக்கவும். (52927)

நாறணி சுங்கவடிவேல் என்பவரது 767903138 V இலக்க தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன ஸ்ரான்லி வீதிக்கும், இருபாலைச்சந்திக்கும்இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்மக்கள்வங்கி, ஸ்ரான்லி வீதியில்ஒப்படைக்கவும். (55934)

### ஆங்கிலம் - கணிதம்

O/L பரீட்சையில் Distinction Credit பெறுபேறடையவும், G, A. Q (Spoken English உட்பட) ஆண்டு 6- 10 வரை கற்பிக்கப்படும். பலவருட அனுபவமுள்ள B. Sc ஆசிரியர்,85, சிவன் கோயிலடி, சிவன்கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (55775)

### A/L பௌதிகவியல்

பௌதகவியல், தூயகணிதம், பிரயோக கணிதம் அனுபவமும் பயிற்சியும் பெற்ற ஆசிரியரினால் சிறப்பாகக் குறுகிய காலத்தில் முழுப் பாடத்திட்டமும் முடித்துக் கொள்ளப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். தொடர்பு:- R B, B.Sc (Cey), நாவலர் பிறவுண் வீதிச்சந்தியில் இருந்து பிறவுண்வீதி இடப்பக்க இரும்புக்கேற் ஒழுங்கை. (55932)

## ஆண்டு நிறைவும் பரிசளிப்பும்

நாவற்குழி அறவொளி மன்றத்தின் பத்தாம் ஆண்டு நிறைவு விழாவும், அறநெறிப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவும், இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல்1.30மணிக்கு மன்றத்தலைவர் செ.குமாரசாமி தலைமையில் நடைபெறும். (இ-9-4)

## ஆண்டுக்குப் பதிலாக மீண்டும் தரம்

கொழும்பு, மே 12

அரசாங்கப் பாடசாலைகளில் தற்போது பாவிக்கப்பட்டு வரும் ஆண்டு என்பதற்குப் பதிலாக வகுப்புகளை தரம் என அழைக்குமாறும் இதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறும் கல்வி உயர் கல்வி அமைச்சு சகல மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது. (இ-10)

## புதியகட்டடம்

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் பளை வேம்போடு கேணி சீ. சீ. த. க. பாடசாலைக்கு ஏழு லட்சம் ரூபா செலவில் வகுப்பறைத் தொகுதியினை அமைத்துக் கொடுக்கவுள்ளது.

இப் பாடசாலையில் மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப போதிய வகுப்பறைகள் இல்லாததால் தற்காலிக கொட்டில் அமைக்கப்பட்டு ஆரம்பபிரிவு வகுப்புகள் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ -117 - 9)

---

# 45ஆம் நாள் நினைவலை



## சீனியர் பாக்கியம்

[ சந்தம் புளியடி, காரைநகர் ]

மறைவு:- 29 - 03 - 98

தாமரைபோல் உருவமே
காரைநகர் முத்தும் நீங்களே

கௌரவமாக நாம் வாழ
கனவுகள் நீங்கள் பல கண்டிர்

எம் வாழ்வில் வந்த ஒரு குல தெய்வமே!
சீனியர் பாக்கியம் அவர்தானே

கருணை கொண்ட ஒரு வெள்ளை மனசு
பேசுவது எல்லாம் இன்சுவையே

காண்போமோ இனி சொல் கேட்போமோ
எம் நதி போல் வளரும் வாழ்க்கையிலே

பாசம் என்னும் தேர் ஏறி நாம் வந்த வேளை
மறைவெனும் சேதி விண்ணில் வந்ததே

புயல் போல் எம்மையெல்லாம்
துன்பத்தில் ஆழ்த்தியதே

ஈழத்து சிதம்பரசிவனை வணங்குவோம்
அவர் ஆத்மா சாந்தி அடைந்திடவே
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சகோதரர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

தகவல்:
சீ. இராசநாயகம்,
60/6. இந்துக்கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம். [55894]

---

# இதய அஞ்சலி

எமது மாகாணப் பணிப்பாளர்
திரு. S. I. R. குரூஸ்
அவர்களின் அருமை மாமியார்

## திருமதி மணி ஜேக்கப்

அவர்கள் திருகோணமலையில் காலமானார் அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிப்பதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை.
யாழ்ப்பாணம்.

(55931)

---

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 10 — 01 — 1923



மறைவு: 12 — 05 — 1996

திருமதி

## ஞானபூரணிசிவராமலிங்கம்

ஆண்டு இரண்டு ஓடி மறைந்தது
வேண்டும் செல்வம் தேடி வைத்தாய்
நீண்டு நினைக்கும் எம் உள்ளங்கள்
யாண்டும் மறக்குமோ நின் கருணை?

கணவன், மகன், மருகி,
பேரப்பிள்ளைகள், உறவினர்.

28, குமாரசாமி வீதி,
கந்தர்மடம். (சி-3723)

---

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 15 — 11 — 1946



உதிர்வு: 29 — 03 — 1998

அமரர்

## கார்த்திகேசு ஜெயராசா

புன்னகை மிக்க பார்வை
புரிந்திடும் அழகுத் தோற்றம்
சொன்னகை தூய்மை மிக்க
சுடரெனத் திகழ்ந்த தெய்வம்
நன்னடை நல்கி எங்கள்
நன்மை சேர் மணியுமானீர்
என்னவர் உங்கள் நினைவு
என்றுமே எம்மில் நிற்கும்.

எமது குடும்பத்தலைவரின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டும், மலர் வளையம் சாத்தியும், அனுதாபச் செய்தி அனுப்பியும், பிற உதவிகள் வழங்கியும் உதவிய அனைவருக்கும் எனது நன்றிகள். குறிப்பாக மக்கள் வங்கி உத்தியோகஸ்தர்கள், மல்லாகம் மகா வித்தியாலய ஆசிரியர்கள், சுன்னாகம் ப. நோ. கூ. சங்க பணியாளர்களுக்கும் எனது நன்றிகள்.

இன்று நடைபெறும் அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

திருமதி விமலாவதி ஜெயராசா.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (55899)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



அமரர்

## சின்னத்தம்பி ராஜரட்ணம்

(துவிச்சக்கர வண்டி திருத்துநர், தெல்லிப்பழை)

தோற்றம்: 04 - 05 - 1940

மறைவு; 12 - 04 - 1998

எங்கள் அன்புத் தெய்வமே ஐயா!
மாதமொன்று சென்றாலும்
உங்கள் அன்பு முகம் மறையவில்லை
பாசமுடன் எமை வளர்த்து ஆளாக்கிய
அன்புத்தந்தையே நித்தமும் உம்மை நினைத்து
வாடுகின்றோம்.

பிரிவினால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கற்பகப்பிள்ளையார் கோயில் வீதி,
உரும்பராய் வடக்கு,
உரும்பராய். (55929)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வெல்வது எப்பொழுது?

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் ஒன்று வீதியைவிட்டு விலகி நவாலி வழுக்கி ஆறு வயல் பகுதியில் புரண்டு விபத்துக்குள்ளாகி இருக்கிறது.

தெய்வாதீனமாக இந்த விபத்தில் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை. சாரதியும் பயணிகள் சிலரும் காயமடைந்துள்ளனர்.

குடாநாட்டில் சமீப நாள்களாக வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. தினமும் ஒருவராவது காயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுகிறார். பெரும்பாலான விபத்துக்களுக்கு வீதிகள் சீர்கெட்டிருப்பதும் காரணம்.

வாகனங்கள் வீதியில் உள்ள குண்டு குழிகளை விலத்தி ஓடும்போது விபத்துக்குள்ளாகின்றன.

நவாலி வழுக்கியாற்று பஸ் விபத்துக்கும் சீர்கெட்ட வீதியே காரணம் என்று சொல்லப்படுகிறது. எனினும் விபத்தை நூறுக்கு நூறு வீதம் அது நியாயப்படுத்துமோ என்பது தெரியாது.

நவாலி வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாது இருந்து வருகிறது. வீதியைத் திருத்துவதற்காக குவிக்கப்பட்ட கற்களும் வீதியில் உள்ள குண்டு, குழிகளும் போக்குவரத்துக்கு பெரும் இடைஞ்சலாக இருந்து வருகின்றன.

குடாநாட்டில் மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் இன்னும் போதிய அளவு முன்னேற்றம் காணாத துறைகளில் வீதிகளும் ஒன்றாகும்.

திருத்தப்படாத பல வீதிகளில் நவாலி சங்கரத்தை வீதியும் ஒன்றாகும். சித்தன்கேணிச் சந்தியில் இருந்து வட்டுக்கோட்டை வரும் வீதி, கல்லுண்டாய் வீதி ஆகியவையும் இன்னும் மோசமான நிலையிலேயே இருந்து வருகின்றன.

கடந்த காலங்களில் –1996இற்குமுன் கொண்டு வரப்பட்ட சொற்ப தார்ப் பீப்பாய்களின்உதவியுடன் வீதிகள் ஒருவாறு சரி செய்யப்பட்டு வந்தன. ஓரளவு பயணம் செய்யக் கூடியதாகவும் இருந்தது.

தற்பொழுது தார்ப் பீப்பாய்களைக் கப்பலால் கொண்டு வருவதில் ஏற்பட்டுள்ள சிரமம் காரணமாகவே வீதிகளைத் திருத்துவதில் தாமத நிலைமை நீடிக்கிறது என்று கூறப்படுகிறது.

ஆகவே வவுனியாவில் இருந்து கிளிநொச்சிக்குத் தரைப்பாதை திறக்கப்படும்வரை இந்த நிலைமையில் பெரிய மாற்றம் ஏற்படும் என்று சொல்வதற்கில்லை.

ஆனால் பாதையைத் திறந்து குடாநாட்டுக்குத் தேவையான தார்ப் பீப்பாய் உட்பட சகல அத்தியாவசிய பொருள்களையும் தாராளமாகக் கொண்டு வந்து விட்டால் பிரச்சினை தீர்ந்து விடுமா என்பதே அடுத்த கேள்வி ஆகும்.

தமிழர் மனங்களை நிரந்தரமாக வெல்வதற்கு ஒரே வழி தமிழரின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய விதத்தில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே ஆகும்.

# என்றும் கூட்டணியின் சேவை தமிழ் மக்களுக்குக் கிடைக்கும்

## திறப்பு விழாவில் ஆனந்தசங்கரி உரை

யாழ்ப்பாணம், மே 12

நீண்ட காலத்துக்குப் பின்னர் யாழ். மாநகரசபையில் தமிழர் விடுதலைக் கூட்டணி மேயர் ஒருவரை பதவியேற்கச் செய்துள்ளது. இனித் தொடர்ந்து எமது பணிகள் மக்களுக்கு கிடைக்கவேண்டும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி உபதலைவர் வீ. ஆனந்த சங்கரி தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைச் செயலகம் நேற்று யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

யாழ். ஸ்ரான்லி வீதி ஒழுங்கையில் அமைந்துள்ள இச்செயலகத்தை எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் அதிபர் எஸ். தியாகராஜா சம்பிரதாய பூர்வமாக நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

செயலகத்தில் தந்தை செல்வாவின்உருவப்படத்தை யாழ்.மாநகர மேயர் திருமதி சறோஜினி யோகேஸ்வரன் திரை நீக்கம் செய்துவைத்தார்.

வீ. ஆனந்த சங்கரி மேலும் அங்கு உரையாற்றும் போது இதுவரை காலமும் லொட்ஜ்களில் தங்கி நின்று கட்சிப் பணிகளைச் செய்தநாம் இனி இந்தப்பணிமனையில் இருந்து பணிகளைச் செய்ய முடியும்.

எனவே இனித்தான் எமது பணிகள் தடையின்றி நடைபெறப் போகின்றன என்றார்.

யாழ். மாநகரசபை உதவி மேயர் நாவேந்தன் உரையாற்றும் போது, இந்தச் செயலகம் எமக்கு ஒரு தேவாலயம் போன்றது. இது எமது செயற்பாடுகளுக்கு நிலைக்களனாக இருக்கப்போகிறது. எமது கட்சி உறுப்பினர்கள் அனைவரும் இங்கு அடிக்கடி வந்து கூடவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

எஸ்.தியாகராஜா பேசுகையில், தமிழர் விடுதலைக் கூட்டணியோடு தொடர்பு வைத்திருப்பதற்கு பயந்திருந்த ஒரு சூழலிலேயும் கட்சியைமீண்டுமஇந்த நிலைக்கு கொண்டு வந்த தலைவர்களைப் பாராட்டவேண்டும்.

எமது கட்சியிடம் தமிழ் பேசும் மக்கள் ஏராளமாக எதிர்பார்க்கிறார்கள்.

மக்கள் என்றும் எம் பக்கம் இருக்கிறார்கள் என்பதை யாழ். மாநகரசபை தேர்தல் நிரூபித்துவிட்டது.

நாம் தேர்தலை மட்டும் நம்பியிருக்காமல்மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்றார்.

யாழ். வர்த்தக சங்க செயலாளர் சி. நமசிவாயம் உரையாற்றும் போது தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மக்கள் மத்தியில் என்றும் அழியாத இடமிருக்கிறது.

உள்ளூராட்சிசபை தேர்தலில் யாழ். மாவட்டம் முழுவதிலும் எமதுகட்சி போட்டியிட்டு இருந்தாலும் கூட வெற்றி பெற்றிருக்க முடியும் என்றார்.

பொன். மதிமுகராசா பேசுகையில், தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தலுக்காக செயற்படும் கட்சியல்ல மக்களின் விடுதலைக்காக, மக்களின் துயர் களைவதற்காக உழைக்கும் கட்சி.

கட்சியிடம் பலம்பொருந்திய மக்கள் சக்தி இருக்கிறது. மக்கள் இக்கட்சியின் பின்னால் ஆயிரமாயிரமாக அணிதிரண்டார்கள். மீண்டும் அணி திரள்வார்கள் என்பதே உறுதி.

எனவே மக்கள் துன்பதுயரங்களை கட்சி துடைக்க அயராது பாடுபட வேண்டும் என்றார். [இ-5]

### விமானத்தில் தெற்கே பொருள்கள்

## ஆறு மாதங்களாகியும் அமுல் செய்ய இயலா நிலை

யாழ்ப்பாணம், மே 12

யாழ்ப்பாணத்தில் இருந்து தெற்கே மரக்கறி வகைகள், பழங்கள் கடல்உற்பத்திப் பொருள்கள் ஆகியவற்றை விமான மூலம் அனுப்ப முடிவு எடுக்கப்பட்டு அது தொடர்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டு ஆறுமாதமாகியும் அத்திட்டம் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து காய்கறிவகைகள், பழவகைகள் மற்றும் கடல் உற்பத்திப் பொருள்களை கொழும்புக்கு விமான மூலம் எடுத்துச் சென்று விற்பனை செய்வதன் மூலம் குடாநாட்டில் உள்ளவர்களுக்கு வருமானம் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இதற்காக ''லயன் எயர்'' விமான நிறுவனம் சரக்கு விமானம் ஒன்றைப் பெற்றிருந்தது. இந்த விமானமூலம் தினம் இரு தடவைகளில் 10 மெற்றிக் தொன் பொருள்களை கொழும்புக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடாகியிருந்தது.

இந்தப் பொருள்களைச் சோதனை செய்ய எக்ஸ்றே கருவி ஒன்றைப் பெறவேண்டியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்ததாகவும் —

கடந்த 6 மாதமாக இந்தக் கருவி பெறப்படாததால் இந்தச் சேவை ஆரம்பிக்கப்படவில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டது.

லயன் எயர் நிறுவனத்தின் சரக்கு விமானம் இரத்மலானை விமான நிலையத்தில் சும்மா தரித்து நிற்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ - 3)

## மேல் மாகாண சபைத் தேர்தலில் தமிழ்க் கட்சிகளும் போட்டியிடும்

கொழும்பு மே, 12

மேல் மாகாண சபைத் தேர்தலில் இம்முறைவடக்கு-கிழக்கைச் சார்ந்த தமிழ்க் கட்சிகள் போட்டியிட ஆயத்தமாகி வருகின்றன.

இதே வேளை இ. தொ.காவும் மேல் மாகாண சபைத் தேர்தலில் தனித்துப்போட்டியிடத் தீர்மானித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

மலையக மக்கள் முன்னணி செல்லச்சாமி தலைமையிலான இ. தே. தொ. காங்கிரஸ் ஆகியன இத் தேர்தலில் போட்டியிடுவது குறித்துதீவிரமாக ஆராய்ந்து வருகின்றன.

இதே வேளை கடந்த மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் லலித் பிரிவைச் சார்ந்த 17 உறுப்பினர்களில் மூவர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிலும் 13 பேர் ஐ தே.கவிலும் இணைந்து விட்டனர்.

எனவே இத்தேர்தலில் போட்டியிடுவது குறித்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி எதுவித இறுதி முடிவும் எடுக்க முடியாமல் திரிசங்கு நிலையில் இருக்கின்றது.

இதே வேளை இத்தேர்தலில் ஈ. பி. டி. பி. கட்சியினர் போட்டியிடுவதில்லை எனத் தீர்மானித்துள்ளனர். வடக்கு-கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் கொழும்பிலே போட்டியிடுவதன் மூலம் எந்த விதமான பிரயோசனமும் ஏற்படப் போவதில்லை எனவும் கொழும்புத் தமிழ் மக்களின் அபிலாஷைகளையும் தேவைகளையும் கவனிக்க கொழும்பில் பல கட்சிகள் [illegible] தெரிவிக்கப்பட்டது.

(இ - 10)

### நாளை

சித்திரை - 30

புதன்கிழமை

திதி: துதியை

முன்னிரவு 10. 26 வரை.

நட்சத்திரம்: அனுஷம்

முற்பகல் 10.33 வரை

அமிர்த சித்தம்

சுபநேரம்: 4.24 – 5.54

ராகுகாலம்: 11.54 – 1.24

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## மரணம்

யாழ்ப்பாணம், மே 12

உயரமான வேப்பமரத்தில் இருந்து தவறி விழுந்து படுகாயமடைந்து ஆபத்தான நிலையில், கடந்த 23 ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் சிகிச்சை பலனளிக்காது நேற்றுக்காலை மரணமானார்.

தொண்டமானாற்றுப்பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் குணசாமி தங்கராசா [வயது 50] என்பவரே உயிரிழந்தவராவார்.

ஆட்டுக்கு குழை வெட்ட ஏறியபோதே அவர் விழுந்து படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## கூட்டணி அலுவலகம்

யாழ்ப்பாணம், மே 12

யாழ். கோட்டை, பெரிய கடை, முஸ்லிம் வட்டாரம், நாவாந்துறை மக்களின் நன்மைகருதி யாழ். மாநகர சபையின் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் செல்லையா விஜயரட்ணத்தின் அலுவலகம் யாழ். மானிப்பாய் வீதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தினமும் மாலை 3 மணிக்குப் பின்னர் பொதுமக்களுக்காக இந்த அலுவலகம் திறந்திருக்கும் என்று மேற்படி உறுப்பினர் தெரிவித்தார். (இ-5)

## காரைநகரில் இயந்திர பூசை

யாழ்பாணம், மே 12

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் சிவன் கோயிலில் இயந்திர பூசை நடைபெற்று வருகின்றது.

கடந்த 15 ஆம் திகதி ஆரம்பமான இந்த இயந்திரபூசை தொடர்ந்து 48 நாள்கள் நடைபெற்று எதிர் வரும் ஜூன் மாதம் 7 ஆம் திகதி மகாகும்பாபிஷேகம் நடைபெறும். (இ-9)

## 3 சுகாதார வைத்திய அதிகாரிகள் இருக்க வேண்டிய இடத்தில் ஒருவரே

''யாழ். மாநகர பகுதியின் சுகாதார செயற்பாடுகளைக் கவனிக்க மூன்று சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு சபையில் இடம் உள்ள போதிலும் ஒரேயொரு அதிகாரிதான் இப்பொழுது கடமையாற்றுகிறார்.''

இப்படி யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையின் சுகாதாரக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் சபைக்கு குறைந்த பட்சம் 500சுகாதாரத் தொழிலாளர்களும் நவீன இயந்திர வசதிகளும் தேவை. ஆனால் தற்பொழுது 300 தொழிலாளர்கள் மட்டுமே கடமையாற்றுகிறார்கள். இதேவேளை கொழும்பு மாநகரசபையில் 15 ஆயிரம் தொழிலாளர்கள் கடமையாற்றுகிறார்கள்.

சபையின் வாகன வசதிகள் குறைவாக இருப்பதால் இத்தேவைக்காக 50 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விரைவில் வாகனங்கள் கொள்வனவு செய்யப்படும் என்றார்.

சுகாதாரப் பொறியியலாளர் பிரிவு பொறுப்பதிகாரி க. ரவீந்திரகுமாரன் பேசுகையில், மாநகரசபை பிரதேசத்திலுள்ள 23 வட்டாரங்களும் 30 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இங்கு ஒவ்வொரு நாளும் 50 மெற்றிக் தொன் குப்பை சேருகிறது.

இடப்பெயர்வின் போது எமது வாகனங்களில் பல இழக்கப்பட்டன. பஸ்நிலையம், சந்தைகள் சேதமடைந்த நிலையிலிருக்கின்றன. இவற்றைத் திருத்தியமைக்க போதிய நிதி வசதி சபையிடம் இல்லை.

1996/ 97 ஆம் ஆண்டுகளில் 3 ஆயிரம் கட்டாக்காலி நாய்கள் ஒழிக்கப்பட்டன. நாய்களைக் கொல்வதற்கு எம்மிடம் நவீன வசதியில்லை. கொன்ற நாய்களை என்ன செய்வது என்பதும் எங்களுக்கு பிரச்சினையான விடயம் என்றார்.

கூட்டத்துக்கு தலைமை வகித்த மாநகரசபை உறுப்பினர் செ. விஜயரட்ணம் பேசுகையில், தொழிலாளர்கள் தங்களுடைய கடமைகளைச் சரிவரச் செய்ய தேவையான உபகரணங்களும் வாகன வசதிகளும் வழங்கப்படவேண்டும். சப்பாத்து, முகமூடி, கையுறை ஆகியவற்றை உடனடியாக தொழிலாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

கூட்டத்தில் யாழ்.மாநகர சபை உறுப்பினர்களான வ. பரமசிவம், திருமதி டொ எஸ். பீரிஸ், செ.கந்தையா. த. சுபத்திரன், செ. இருதயராஜன் ஆகியோரும் உரையாற்றினார்கள். (இ–5)

### உதயவாக்கு

அறம் என்ற நீரில் நீராடி வாய்மை என்ற வாசனைத் திரவியத்தை உடலில் பூசு, அப்போது உன் முகம் பேரொளியுடன் திகழும். கொடுக்கும் தெய்வம் உன் மேல் ஆயிரக்கணக்கான அன்பளிப்புக்களை அள்ளிக் குவிப்பார்,

குருநானக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ. 5 கோடி 80 லட்சம் செலவில் யாழ். மாவட்டத்தில் சிறு திட்டங்கள்

### ஐ. நா. தூதரகம் செயற்படுத்தும்

யாழ்ப்பாணம், மே 12

யாழ். மாவட்டத்தில் சிறு திட்டங்களை மேற்கொள்ள 5 கோடி 80 லட்சம் ரூபாவை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஒதுக்கீடு செய்துள்ளது.

சுயதொழில் வாய்ப்பை யளிக்கக் கூடிய சிறுதொழில்களை ஆரம்பித்தல் உட்பட சிறுசிறு புனரமைப்புப் பணிகளுக்கு இந்த நிதி மூலம் திட்டங்கள் வகுக்கப்படவிருக்கின்றன.

கடந்த வாரம் யாழ். செயலகத்தில் நடந்த கூட்டத்தில் இத்திட்டங்கள் பற்றி ஆராயப்பட்டது.

பிரதேச செயலர்கள் தமது பகுதிகளில் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் பற்றிய விவரங்களை சமர்ப்பித்தனர். (இ-3)

## தபால் மா அதிபர் மீது குற்றம் சுமத்தப்பட்டால் விசாரிக்கப்படும்

### ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, மே 12

தபால் மா அதிபர் சோமா கொட்டக தெனியாவுக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டால் அவை விசாரிக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்திலேயே ஜனாதிபதி இப்படித் தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் பல அமைச்சர்கள் இது தொடர்பாக பிரஸ்தாபித்த போதே ஜனாதிபதி இதைத் தெரிவித்தார். (இ-10-3)

## ஆள்கள் இல்லாத வீடுகளில் தளபாடங்கள் திருட்டு

யாழ்ப்பாணம் மே 12

யாழ். முஸ்லிம் வட்டாரத்தில் ஆள்களில்லாத வீடுகளிலிருந்து ஜன்னல்கள், கதவுகள் உட்பட பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டு வருகின்றன.

பட்டப்பகலிலே இத் திருட்டுக்கள் இடம் பெற்று வருகின்றன. வீடுகளிலிருந்து களற்றப்படும் ஜன்னல்கள், கதவுகள் உட்பட மற்றும் பல பொருள்கள் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுகின்றன என்று கூறப்படுகிறது. (இ-5)

## திட்டமிடல் பணிப்பாளர் விசேட கூட்டம்

தற்போது யாழ். வந்துள்ள வடக்கு — கிழக்கு மாகாண பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். றங்கராஜா நாளை புதன் யாழ். செயலகத்தில் விசேட கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளார்.

இக் கூட்டத்தில் புனர்வாழ்வுப் பகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும், திட்டமிடல், பிரதித்திட்டமிடல் அதிகாரிகளும் கலந்து கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## வடிசாராயம் தயாரித்த அறுவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மே 12

சட்ட விரோதமாக தயாரிக்கப்பட்ட வடிசாராயம் மற்றும் வடிசாராயம் தயாரிக்கும் உபகரணங்கள் வைத்திருந்த குற்றத்துக்காக கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட ஆறு பேருக்கு சாவகச்சேரி நீதிவான் ஏகநாதனால் அபராதம் விதிக்கப்பட்டது

கொடிகாமம் தெங்கு பனம் பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தினரின் அனுசரணையுடன் தென்மராட்சி மதுவரிப் பொறுப்பதிகாரி றோகான் ராஜு தலைமையில் சென்ற திடீர் பரிசோதனைக் குழுவினர் நாவற்குழி, சாவகச்சேரி, வரணி ஆகிய பகுதிகளிலிருந்து மேற்படி நபர்களை கைது செய்தனர்.

இவர்களுக்கு ரூபா 750 முதல் ரூபா 6,000 வரை அபராதம் விதிக்கப்பட்டது. (இ)

### இராணுவ கட்டுப்பாடற்ற

## வன்னிப் பகுதியிலிருந்து தென்பகுதிக்கு நெல்

வவுனியா, மே 12

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னியில் இருந்து தென்பகுதிக்கு நெல் எடுத்துச் செல்ல அனுமதி கிடைத்துள்ளது.

அப்பகுதியில் அமோக விளைச்சலைக் கொடுத்த நெல் வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படாததால் தேங்கிக்கிடந்தது.

சந்தை வாய்ப்பு இன்றித் தேங்கிக்கிடந்த நெல்லை தெற்கே எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், பிரதி புதன்கிழமைகளில் 10 லோட் நெல் வவுனியாவுக்கு எடுத்து வரப்படுகிறது.

ஒரு மூடை நெல்லை தனியார் வர்த்தகர்கள் 600 ரூபாவுக்கு கொள்வனவு செய்வதால்விவசாயிகள்பாதிக்கப்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதையடுத்து, மாற்று ஏற்பாடு குறித்து ஆராயப்படுகிறது. (இ-164-3)

## வடிகால்களில் கழிவு நீர் தேங்கி நின்று துர்நாற்றம்

யாழ்ப்பாணம், மே 12

பாஷையூர்ப் பகுதியிலுள்ள வடிகால்களில் கழிவு நீர் தேங்கி நிற்பதால் துர் நாற்றம் வீசுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

தனியார் வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரை இவ் வடிகால்களுக்குள் விடுவதனாலேயே கழிவு நீர் தேங்கி நிற்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

மழை நீர் ஓடும் இந்த வடிகால்களில் தனியார் வீடுகளிலிருந்து வெளிவரும் நீரை விடுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்று யாழ். மாநகரசபையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-5)

## குடாநாடு-கிளிநொச்சி ரூ.4 கோடி செலவிட முடிவு

### இணைப்பு குழுவில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 12

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் குடாநாட்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் யாழ். மாவட்டத்தில் 3 கோடி 20 லட்சம் ரூபா செலவிலும்—

கிளிநொச்சி மாவட்டத்தில் 80 லட்சம் ரூபா செலவிலும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் நடந்த மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் குறித்து விரிவாக இச்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

மாகாணசபை அதிகாரிகள், யாழ். கிளிநொச்சி மாவட்ட அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் பங்கு பற்றினர். (இ-3)

## கரபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம் மே 12

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினர் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றினை யாழ். மாவட்ட ரீதியில் நடத்தவுள்ளனர்.

இப்போட்டியில் கலந்து கொள்ளும் கழகங்கள் உடனடியாக விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ - 5)

## ஆசிரியருக்கு கருத்தரங்கு

நல்லூர், மே 12

யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இன்று நடைபெறும்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இக்கருத்தரங்கில் பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளுவார்கள்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையில் நடைபெறும் மேற்படி கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணன், இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் வி. மு. நவரத்தினம், இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நா. செல்வநாயகம், தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா, திருமதி வை. விசாகரூபன் ஆகியோர் உரையாற்றுவார்கள். (இ-103)

# சமய நெறிகளுக்கமைய வாழ்வது பெண்களின் உயர்வுக்கு அவசியம்

### அருள்நெறி விழாவில் ஆதீன முதல்வர் உரை

நல்லூர், மே 12

''பெண்களுக்கு நல்ல பண்புகளை சமயம் கற்றுத்தருகிறது. சமயநெறிகளுக்கமைய வாழ்வது பெண்களின் உயர்வுக்கு அவசியம் ஆகும்.

இவ்வாறு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற அருள்நெறி விழாவில் பேசிய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் கூறினார்.

இந்து கலாசார திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையில் நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில் விழா நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சார்ய சுவாமிகள் பேசும் போது மேலும்கூறியதாவது:

பெண்களால் தான் பூமி இயங்குகிறது-

நாளைய சமுதாயத்தை உருவாக்கும் இவர்கள் எமது மதக் கோட்பாடுகளையும் நெறிகளையும் கடைப்பிடித்தால்தான் ஒரு சிறந்த சமுதாயத்தைத் தோற்றுவிக்க முடியும்.

ஆங்கிலேயர் காலத்தில் தனது புரட்சியூடாக எமது மதத்தைக் காத்தவர் நாவலர்.

நாம் எல்லாவற்றையும் சிந்தித்து வாழவேண்டும் என்பதற்காக இந்த அறநெறி விழா நடைபெறுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

திருமதி சாந்தி நாவுக்கரசன் தமது தலைமையுரையில்,

எமது சமயம் அருகும் நிலையில் இருந்த போது அதை வளர்க்க நாவலர் எவ்வாறு பாடுபட்டார் என்பதை அறிவோம். இன்றும் அப்படியான ஒரு கட்டத்தில் எமது நிலை உள்ளது.

யாழ்ப்பாணம் முன்பு இருந்த நிலைக்கும் இப்போதுள்ள நிலைக்கும் மாறுபாடு உண்டு.

மக்கள் பலதரப்பட்ட துயரங்களைச் சந்தித்து மிகப் பின்தங்கிய நிலையில் உள்ளனர்.

இந்த நிலையில் அறநெறிப் பாடசாலைகளை நடத்தி சிறுவர்களுக்கு உண்மையான கருத்துக்களை — சமய விழுமியங்களை — சொல்லிக் கொடுக்கிறோம்.

இதன் மூலம் சிறுவர்கள் சமய உண்மைகளை தமது உள்ளத்தில் பதிக்கவும் எமது மண்ணில் ஆன்மீகம் தளைக்கவும் முடிகிறது.

இந்து சமய நிறுவனங்களும் ஆலயங்களும் ஒன்றிணைந்து இது போன்ற விழாக்களை நடத்த முன் வரும் போது, மக்களிடையே இறை பக்தியும் நல்ல சிந்தனைகளும் உருவாகும். இதை உணர்த்தும் நிலைக்களனாகவே இன்றைய அருள்நெறி விழா இடம் பெறுகிறது என்றார்.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் தமது உரையில் கடந்த சில வருடங்களாக யாழ். குடாநாட்டில் அறநெறிப் பாடசாலைகள் மிகவும் நன்றாக இயங்குகின்றன. சிறுவர்கள் மத்தியில் சமய நெறிகள் புகுத்தப்பட வேண்டும். அதனூடாக ஒரு நல்ல பயனுள்ள பிரசைகளாக அவர்கள் எதிர்காலத்தில் விளங்க முடியும்.

இந்த [illegible] உடன் இயங்கிவரும் அறநெறிப் பாடசாலைகள் அனைத்து மாவட்டங்களிலும் தமது பணிகளை மேற்கொள்ளுகின்றன.

கடந்த மாதம் திறந்து வைக்கப்பட்ட துர்க்காமணி மண்டபத்தில் முதன்முதலாக ஒருநல்ல நிகழ்வு இடம் பெறுவதன் மூலம் மண்டபம் அமைக்கப்பட்டதன் உண்மையான நோக்கமும் நிறைவேறுகிறது குறித்து மகிழ்ச்சியடைகிறேன் என்றார்.

யாழ்,பல்கலைக்கழகஇந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன், துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி, அருட்கவி வி. வினாசித்தம்பி உட்பட பலர் பேசினார்கள்.

கலாசார அலுவலர் மாலினி இராமலிங்கம் நன்றியுரை வழங்கினார்.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களினால் வழங்கப்பட்டன. (இ-103)

## கெயர் அதிகாரி வருகிறார்

கெயர் நிறுவனத்தின் நுண் திட்டப் பணிப்பாளர் ஆர். மைக்கல் இரு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை மறுதினம் வியாழன் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

இங்கு தங்கியிருக்கும் நாள்களில் குடாநாட்டின் மீன்பிடி தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்றில் அவர் பங்குபற்றுவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு பாதிக்கப்பட்டோருக்கு மட்டும் இந்திய சிமெந்து வழங்கவேண்டும்

## கிராம சேவையாளருக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே. 12

''வீடுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டும் இந்தியாவினால் வழங்கப்பட்ட சிமெந்து விநியோகிக்கப்பட வேண்டும்'', இப்படி யாழ். நகர தளபதியும் யாழ்ப்பாணம் — நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளின் ஒருங்கிணைப்பாளருமான சுஸந்த மெண்டிஸ் கேட்டுக்கொண்டார்.

நல்லூர், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள கிராம சேவை உத்தியோகத்தர்களை தனது அலுவலகத்துக்கு அழைத்து கலந்துரையாடல் நடத்திய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு கூறியதாவது:

சிமெந்து பெறுபவர்கள் வீடுகளைத் திருத்துகிறார்களா என்பதைக் கவனித்து பிரதேச செயலர்களுக்கு அறிக்கை சமர்ப்பித்தால் அவர்கள் எமக்குத் தெரிவிப்பார்கள்.

வன்னிப் பகுதியிலிருந்து தமது சொந்த இடங்களுக்குத் திரும்புபவர்கள் மிகவும் கஷ்டமான நிலையில் வந்து சேருகிறார்கள். அவர்களுக்கு எந்தக் குறைகளும் ஏற்படாது கிராம சேவை உத்தியோகத்தர்கள் கவனிக்க வேண்டும்.

வன்னியிலிருந்து மீளக்குடியேறுபவர்கள் அகதிகள் அல்லர். அவர்கள் எமது சகோதரர்கள். இந்த மண்ணின் சொந்தக்காரர்கள். ஒரு காலத்தில் இங்கு சிறப்பாக வாழ்ந்தார்கள். எனவே அவர்கள் மீண்டும் வழமையான வாழ்க்கைக்கு திரும்ப உதவ வேண்டும்.

இப்படி அவர் கேட்டுக் கொண்டா.

(இ-5)

## வடமராட்சி கிழக்கில் கண்டல் மரங்கள் வெட்டுவது தடை

செம்பியன்பற்று, மே 12

வடமராட்சி கிழக்குப் பகுதியில் கண்டல் மரங்கள் விறகுக்காக தறிக்கப்படுவது அதிகரித்து வருவதை அடுத்து கண்டல் மரங்களைத் தறிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் சவுக்கு மரத்தை விறகுக்காக தறிப்பது தடை செய்ததைத் தொடர்ந்தே கண்டல் மரங்கள் தறிப்பது அதிகரித்துள்ளது.

இப்பகுதியில் உள்ள இளைஞர் கழகங்கள் சமூகநலன் பேணும் அமைப்புக்கள் என்பன கண்டல் மரங்களை வெட்டுவதைத் தடை செய்துள்ளதுடன் அதைக் கண்காணித்தும் வருகின்றன.

(ஐ-36)

## மலசல கூடம் திருத்த 'யுனிசெவ்' நிதி போதாது

அரியாலைப்பகுதியில் பழுதடைந்திருக்கும் மல சல கூடங்களை யாழ்.மாநகர சபையினால் வழங்கப்படும் ஆயிரம் ரூபாவைப் பயன்படுத்தி திருத்தியமைக்க முடியாதுள்ளதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

இம் மலசல கூடங்கள் அழிந்தும், சிதைந்தும் காணப்படுவதால் இவற்றை முற்றாக சீரமைப்பதற்கு குறிப்பிட்ட நிதி போதாமலிருக்கிறது.

மல சல கூடங்களை புனரமைப்பதற்கு யுனிசெவ் திட்டத்தின் கீழ் மாநகர சபையினால் ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(இ-5)

## மதகு திருத்தம்

நீர்வேலி, மே 12

யாழ்ப்பாணம் — பருத்தித்துறை வீதியில் இருபாலைச் சந்தியிலுள்ள பெரிய மதகு திருத்தப்பட்டு வருகின்றது.

பொதுமக்கள் பாவனைக்காக அருகில் மண்பாதை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அப்பாதையால் போக்கு வரத்துச் செய்து வருகின்றார்கள்.

(இ-110-9)

## கிரவல் வீதியில் தூசிப்படலம் வாகனங்களின் வேகத்தை குறைக்க வேண்டுகோள்

வவுனியா, மே 12

இராணுவக் கட்டுப்பாடு அற்ற வன்னிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கிரவல் மண் பாதைகளில் வாகனங்களில் செல்வோர் வேகமாகச் செல்வதால் வீதிக்கும் பொது மக்களுக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே வாகனங்களில் செல்வோர் வேகத்தைக் குறைத்துப் பயணங்களை மேற்கொள்ளுமாறு வீதி அபிவிருத்தி நிறைவேற்றுப் பொறியியலாளர் கேட்டுள்ளார்.

தார் இல்லாத காரணத்தால் வன்னிப் பகுதியில் பல வீதிகள் கிரவல் மண்ணைக் கொண்டே அமைக்கப்படுகின்றன. இவ்வாறு கிரவல்களைக் கொண்டு அமைக்கப்படும் பாதைகளில் வாகனங்கள் வேகமாகச் செல்லும் போது வீதி விரைவிலேயே படுமோசமாக பழுதடைந்து விடுகின்றது. இவ்வாறு பழுதடைந்த வீதிகளைச் செப்பனிடுவதற்கு வேண்டிய வசதிகளை உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்றது. இதனைக் கருத்தில் கொண்டு வாகன சாரதிகள் தமது வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்தி பெரும் சிரமத்தின் மத்தியில் அமைக்கப்படும் வீதிகளைப் பாதுகாப்பதில் ஆர்வம் காட்ட வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் வேகமாக வாகனங்கள் செல்வதால் கிரவல் வீதிகளில் இருந்து எழும் தூசிகளினால் பாதசாரிகளும் பலவகைகளில் பாதிக்கப்படுகின்றனர். அவர்கள் நோய்வாய்ப்படவும் இது காரணமாக அமைகின்றது.

எனவேதான் வாகனசாரதிகள் வேகத்தைக் குறைத்து பிரயாணம் செய்வது அவசியமாகும் என அவர் அறிவுறுத்தியுள்ளார்.

(ஐ-9)

## வன்னி வெடி விபத்தில் ஆறு புலிகள் மரணம்!

வவுனியா, மே 12

நேற்று முன்தினம் வன்னியில் ஏற்பட்ட தவறுதலான வெடி விபத்து ஒன்றில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர் என ''புலிகளின் குரல்'' வானொலி அறிவித்துள்ளது.

லெப்டினன்ட் நிலமகள் (பழனிவேல் சித்திராதேவி — யாழ்ப்பாணம்), கப்டன் உருத்திரா (சின்னத்தி தேவகலா — யாழ்ப்பாணம்), கப்டன் கயல்கொடி (தர்மதேவன் வனஜா — யாழ்ப்பாணம்), அருள்வாணி (தர்மராஜா ஜெயதர்ஷினி — திருகோணமலை), தமிழ்மங்கை (சிவகுரு ராஜகுரு—கண்டி), சுஜிதா (ஆரோக்கியநாதன் யூட்நாத் — யாழ்ப்பாணம்) ஆகியோரே மரணமடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

# ஐந்து மாகாண சபைகளும் ஜூன்மாதத்துடன் கலைப்பு

கொழும்பு: மே 12

தெற்கில் உள்ள 5 மாகாண சபைகள் ஜூன் மாதத்துடன் கலைக்கப்படும் என்று அரசாங்கம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

இந்த மாகாணசபைகளுக்கான தேர்தல் ஒகஸ்ட் மாத முற்பகுதியில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிட பொது மக்கள் ஐக்கிய முன்னணி, ஐ. தே. க. ஆகியன வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன,

ஐ. தே. க. தமிழ் வேட்பாளர்களையும் நிறுத்த முயற்சி மேற் கொண்டுள்ளது.

(இ-3)

## தெற்கில் மண் சரிவு

கொழும்பு, மே 12

கொஸ்லந்த, நாக்கிட்டியப் பகுதிகளுக்கிடையே வேரவல — வெல்லவாய பிரதான வீதியில் நேற்றுக் காலை மண் சரிவு ஏற்பட்டது.

இப்பகுதிகளில் கடந்த சில நாள்களாக கடும் மழை பெய்து வருவதாகவும்— இதன் காரணமாகவே மண் சரிவு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## நிறுத்தல் அளவை உபகரணங்களில் மோசடி

செம்பியன்பற்று, மே 12

வடமராட்சிகிழக்கு நாகர் கோயில், மணல்காடு பகுதியில் உள்ள இரண்டு சந்தைகளிலும் வியாபார நடவடிக்கையில் நிறுத்தல் அளவை உபகரணங்களில் மோசடிகள் இடம்பெறுவதாக பாவனையாளர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக மீன் சந்தையில் தராசு படிகளுக்குப் பதிலாக முத்திரையிடப்படாத படிகளும் சைக்கிள் குடம் போன்ற பொருள்களும்பயன்படுத்துவது அவதானிக்கப்பட்டுள்ளது.

மீன் வியாபாரிகள் கைத் தராசுகளைப் பயன்படுத்துவதால் சரியான நிறையில் மீன் வகைகள் இருப்பதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் தராசுபடிகளுக்கு முத்திரை இடும் பணிகள் நீண்ட காலமாக நடைபெறவில்லை. சந்தையிலும் வணிக நிலையங்களிலும் முத்திரை இடப்படாத தராசுபடிகளே பயன் படுத்தப்பட்டு வருகின்றன.

### சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே 12

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் கோயில் வருடாந்த மகோற்சவம் நாளை புதன் காலை 9–00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 13 தினங்கள் நடைபெறும்.

காலை உற்சவம் 8–00 மணிக்கும், மாலை உற்சவம் 4–00 மணிக்கும் ஆரம்பமாகும். மகோற்சவக் கிரியைகளை தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள் நடத்திவைப்பார்.

(ஐ–7)

★ ★ ★

பண்டத்தரிப்பு பத்திமா அன்னையின் பெருவிழாவை முன்னிட்டு யாழ். மறைமாவட்ட ஆயர் அதி. வண. தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகையால் நாளை புதன்கிழமை காலை 7–00 மணிக்கு திருவிழாத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட உள்ளது.

(ஐ–9)

★ ★ ★

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலய சகஸ்ர சங்காபிஷேகமும், மணவாளக் கோலபெருவிழாவும் இன்று செவ்வாய் காலை 9-00 மணி முதல் ஆரம்பமாகி இடம்பெறும்.

விசேட யாக பூசைகள், திருவூஞ்சல் ஆகியவை மாலை 5–00 மணி முதல் ஆரம்பமாகி விநாயகப் பெருமான் ஆலயத்தை... வெளிவீதி உலாவருதலும் இடம்பெறும்

(இ–7)

## புலிகளுக்கு உதவாதீர் என படையினர் கிழக்கில் ஒலிபெருக்கியில் அறிவிப்பு

கொழும்பு, மே 12

தடை செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குப் பணம் அல்லது பொருள் உதவிகளைச் செய்தல் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும். எனவே விடுதலைப் புலிகளுக்கு உதவி புரிவதை அனைவரும் கைவிட்டுவிட வேண்டும்.

கிழக்கில் விசேட அதிரடிப் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளில் விசேட அதிரடிப்படையினர் ஒலிபெருக்கிகள் மூலம் இவ்வாறு பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளனர்.

மட்டக்களப்பில் ஆரையம்பதியில் இருந்து பட்டிருப்பு வரையான பகுதிகளிலேயே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை மீறி விடுதலைப் புலிகளுக்கு யாராவது உதவி புரிந்தால் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் எனவும் —

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வசிக்கும் மக்கள் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்குப் பணத்தையும் பொருள்களையும் எடுத்துச் சென்று வழங்குவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இவ்வாறு உதவி புரிவதும் தண்டனைக்குரிய குற்றமாகும் எனவும் —

ஒலிபெருக்கிகள் மூலம் தமிழில் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ–9–7–10)

## சமய அறிவு போட்டி பரிசளிப்பு

யாழ்ப்பாணம், மே 12

கல்வியங்காடு வீரபத்திரர் ஆலய மகோற்சவ கால சொற்பொழிவை யொட்டிய சமய அறிவுப்போட்டிப்பரீட்சையில் 3 பிரிவுகளிலும் சித்தியடைந்தவர்களுக்கான பரிசில்கள் நாளை மறுதினம் வியாழன் பிற்பகல் 5 மணிக்கு தேவஸ்தானத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் மகோற்சவ காலத்தில் நிகழ்த்திய சொற்பொழிவையடுத்து தினமும் 5 வினாக்கள் வழங்கப்பட்டு விடைகள் சேகரிககப்பட்டே இப்பரீட்சை நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ–8)


ராஜா, யாழ்ப்பாணம்.

பல வருடங்களுக்குப் பின் மீண்டும் ஆரம்பம்!

சினிமா ரசிகர்களின் ஆவலைத் தீர்க்க ராஜா டாக்கீஸ் அகன்ற வெண்திரையில் நிறைந்த ரசிகர் கூட்டத்துடன் காட்சி அளித்துக்கொண்டிருக்கின்றது.

முன்னாள் தமிழக முதல் அமைச்சர்கள் மக்கள் திலகம் M.G.R., ஜெயலலிதா நடித்த—

ஜெமினி தயாரிப்பிலும் இலங்கையில் S. T. R. பிலிம்ஸ் பெருமையுடன் திரையிட்ட —

ஒளி விளக்கு

M.G.R. இன் 100 ஆவது படம்

தினசரி புதிய நேரம்:- பிற்பகல் 1.00, 4.30 மணி சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் காலை 10.00, 1.00, 4.30 மணிக்கும் காட்சிகள் காண்பிக்கப்படும். (சி/3731)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**பேச்சு...**

(முதலாம் பக்கத் தொடர்)

பத்திரிகள், தேவாலயங்கள் மற்றும் வழிபாட்டுத்தலங்கள் மீதான — கண்மூடித்தன மான — தாக்குதல்கள் நிறுத் தப்பட வேண்டும்.

★ மூன்றாம் தரப்பு மத்தி யஸ்தத்தை அரசு ஏற்க வேண்டும்.

-மேற்படி நான்கு நிபந் தனைகளையே புலிகள் விதித்திருக்கின்றனர்.

ஈழத் தமிழர்களுக்கு ஆதர வான இரண்டு முக்கிய அமைப்புகள் தென்னாபிரிக் காவைத் தளமாகக்கொண்டு செயற்படுகின்றன. சமா தானம், நீதிக்கான தமிழர் அமைப்பு அதில் ஒன்று. அதன் தலைவர் டாக்டர் பி. லிங்கம். இலங்கையில் அடக்கு முறைகளுக்கு எதி ரான சர்வதேசச் சங்கம் மற்றையது. அதன் தலைவ ராகத் தென்னிந்தியரான டொமி எம். பொதடொன் உள்ளார்.

பேச்சுக்கள் தொடர்பான தமதுநிபந்தனைகளை இந்த இரு அமைப்புகளுக்கும் புலி கள் அறிக்கை வடிவில் வழங்கியுள்ளனர் என ஜய லத் ஜெயவர்த்தனா கூறி யுள்ளார்.

மேற்படி விடயம் தொடர் பான அறிக்கையை இந்த இரு அமைப்புகளும் தென் னாபிரிக்கப் பிரதி அமைச்சர் களில் ஒருவரான அஸீஸ் பாஹாட்டிடம் உத்தியோக பூர்வமாகக் கையளித்துள் ளன. அத்துடன் இலங்கை யில் ஜனாதிபதி, எதிர்க் கட் சித் தலைவர் ஆகியோருக் கும் அந்த அமைப்புகள் அனுப்பி வைத்துள்ளன.

ஆனால் அரசு இது விட யத்தில் தனக்கு எதுவும் தெரியாது என்பது போல் மௌனஞ்சாதிக்கின்றது என கின்றார் ஜயலத்.

இது விடயத்தில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்ற நிபந்தனையைத் தவிர புலி களின் ஏனைய நிபந்தன களை ஏற்க ஐ.தே.க தயா ராக இருப்பதாக ஜெயவர்த் தனா கூறினார்.

மூன்றாம் தரப்பு மத்தி யஸ்த விடயத்தில் இலங்கை அரசு தமது நிலைப்பாட்டை முதலில் பகிரங்கப்படுத்த வேண்டும் என்றும் அவர் சொன்னார். (உ-21-9)

**யாழ்ப்பாணத்தில்...**

(முதலாம் பக்கத் தொடர்)

வடபகுதி இராணுவத் தள பதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல, யாழ். நகரப் படைத் தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் ஆகி யோர் உட்பட படை அதி காரிகள் பலர் கலந்து கொண்டனர்.

வெசாக்கை ஒட்டி யாழ்ப் பாணப் பகுதியில் உள்ள படை முகாம்கள் சென்றி களில் நேற்று வர்ண வெசாக் கூண்டுகள் தொங்கவிடப்பட் டிருந்தன. சில வீதிச் சோதனை நிலையங்களில் பொதுமக்களுக்கு குளிர் பானம், சிற்றுண்டிகள் என் பனவும் வழங்கப்பட்டன.

**தலதா..**

(முதலாம் பக்கத் தொடர்)

தலதா மாளிகையின் தற் போதைய பாதுகாப்பு நட வடிக்கைகளில் உள்ள குறை பாடுகளைப் பரீட்சிப்பதற் காகவே தப்பாசக்கிகள், ரவை கள் சகிதம் மேற்படி பெண் பொலிஸ் உத்தியோகத்தர் சிவில் உடையில் உள்ளே அனுப்பப்பட்டார்.

தலதா மாளிகையின் பாது காப்பை அறிவதற்காக கண்டி பொலிஸ் அத்தியட்ச கரின் பணிப்பின் பேரில் இந் நடவடிக்கை எடுக்கப்பட் டது.

பாதுகாப்பு உத்தியோகத் தர்களின் கண்களில் மண் ணைத் தூவிவிட்டு உள்ளே நுழைந்த மேற்படி பெண் பொலிஸார் பின்னர் அங் கிருந்து வெளியேறினார்.

இதேபோன்ற நடவடிக் கையில் இரண்டாவது முறை யாகவும் ஈடுபட முயன்ற போது அவர் அங்கிருந்த பாதுகாவலர்களிடம் சிக்கி னார்.

இந்தப் பரீட்சார்த்த நட வடிக்கை தலதா மாளிகை யின் பாதுகாப்பு ஏற்பாடு களில் உள்ளகுறைபாடுகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித் தது.

குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானதைத் தொடர்ந்து தலதா மாளிகையின் பாது காப்பு ஏற்பாடுகள் பலப் படுத்தப்பட்டது தெரிந் ததே. (ஐ-9-10)

# வெள்ளி விழாவைக் கொண்டாட பல்கலைக்கழகம் தயாராகின்றது!

## சர்வதேச தமிழ் கருத்தரங்கிற்கும் ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 12 யாழ். பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டு கள் நிறைவடைவதை ஒட்டி அடுத்த ஆண்டு வெள்ளி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடவெதற்கு யாழ். பல்கலைக்கழகம் பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

வெள்ளிவிழா ஆண்டின் சிறப்பு நிகழ்வாக தமிழ் கல்வி சம்பந்தமான சர்வ தேசக் கருத்தரங்கு ஒன்றை நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்படவுள் ளது.

வெள்ளிவிழா நிகழ்வுகளில் கடந்த 25 வருடகால கல்வி வளர்ச்சி பற்றிய நூல் வெளி யீடு, துணைவேந்தர்கள், பீடாதிபதிகள், பேராசிரியர் கள் ஆகியோரின் நினைவு களைத் தாங்கிய நூல் வெளி யீடு என்பனவும் இடம் பெற உள்ளன. அத்துடன் கல்வி சார்ந்த மாபெரும் கண் காட்சி ஒன்றும் நடத்தப்பட உள்ளது.

வெள்ளி விழா நிகழ்வு களை நினைவூட்டும் வகை யில் சிரமதானப் பணிகள், விளையாட்டு, கலை நிகழ்வு கள் போன்றனவும் முன் கூட் டியே நடத்தப்பட உள்ளன.

பழைய மாணவர்கள், பல் கலைக் கழகம் சார்ந்தோர், வெளிநாடுகளில் உள்ள பல்க லைக் கழக மாணவர்கள், விரி வுரையாளர்கள் உட்பட சமூ கத்திலுள்ள பலதரப்பட் டோரையும் இணைத்து இந்த வெள்ளி விழா நிகழ்வு களைச் சிறப்புடன் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை உதயனுக்குத் தெரிவித்தார்.

**இந்தியா...**

(முதலாம் பக்கத் தொடர்)

உலக அளவில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

1974 ஆம் ஆண்டு மே மாதத்தில் தனது முதல் அணுப்பரிசோதனையை இந் தியா நடத்தியது. அதன்பின் ஒரே சமயத்தில் பெரிய அள விலான நிலத்தடி அணு குண் டுச் சோதனைகள் நடத்தப் பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.

ஒன்பது வரிகளை மட்டும் கொண்ட அறிக்கையை வெளியிட்ட பிரதமர் வாஜ் பாய் இந்த அணுச்சோதனை தொடர்பாகச் செய்தியாளர் கள் தொடுத்த கேள்விக் கணைகளுக்கு மேற்கொண்டு பதிலளிக்க மறுத்துவிட்டார்.

இந்தியாவின் இந்தப் பரி சோதனைகளால் கடும் ஏமாற்றமடைந்திருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள் ளது. இந்தியா மீது ஏற்று மதித் தடைகளை விதிப்பது குறித்துத் தற்போது ஆராயப் பட்டு வருவதாக அமெரிக்க அதிகாரி ஒருவரை மேற் கோள்காட்டி செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்தியாவின் அணுச்சோத னைகளை பாகிஸ்தான் வெளி விவகார அமைச்சர் கோகர் அயூப்கான் காரசாரமாகக் கண்டித்துள்ளார். முழுப் பிராந்தியமுமே அணுஆயுதப் போட்டாபோட்டி ஒன்றுக் குள் இழுக்கப்பட்டு வருவ தாக தெரிவித்த அவர் இந் தியாவுக்கு எதிராக ஏற்று மதித் தடைகள் கொண்டு வரப்பட வேண்டும் என்று கேட்டுள்ளார்.

இந்தியாவின் இந்த அணு ஆயுதச் சோதனை குறித்து இலங்கை அரசின் சார்பில் உத்தியோகபூர்வ ரீதியான கருத்து எதுவும் உடனடியா கத் தெரிவிக்கப்படவில்லை.

எனினும் மோதல்கள் நிறைந்த இப் பிராந்தியத் தின் ஸ்திர நிலையை மேலும் குழப்பி விடும் செய்தி இது என்று இலங்கை அரசாங்கம் கருத்து வெளியிட்டிருப்ப தாக வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித் தது.

தேவைப்பட்டால் அணு ஆயுதங்களைத் தயாரிக்கவும் தயங்கமாட்டோம் என்று பதவிக்கு வருவதற்கு முன் னரே பாரதிய ஜனதாக் கட் சிப் பிரமுகர்கள் கூறிவந்த னர். ஆனால் பதவிக்கு வந்து இருமாத காலத்தில் அணு வெடிப்புப் பரிசோதனை களை நடத்தியிருப்பதன் மூலம் பாரதிய ஜனதாக் கட்சி அரசு பலரையும் ஆச் சரியத்துக்கும் அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியுள்ளது. (ஐ-9)

**தப்பியோடிய...**

(முதலாம் பக்கத் தொடர்)

தான் இறுதிக்கட்ட கால அவகாசம் வழங்கப்பட்டது. இனிமேல் கால அவகாசம் வழங்கப்படமாட்டாது. படைக்குப் புதிதாக 15 ஆயி ரம் பேரைத் திரட்டுவதற் கான முதற்கட்ட வேலைத் திட்டம் தற்போது பூர்த்தி யடைந்துள்ளது எனத் தெரி வித்தார்.

இராணுவத் தலைமையக நிர்வாகப் பிரிவு பிரிகேடியர் கே. பி. எகொடவெல இது தொடர்பாக தெரிவித்தத வது:-

இதுவரை கிடைத்துள்ள தகவல்களின் பிரகாரம் 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் வரையான படையினர் சேவையில் மீண்டும் இணைந் துள்ளனர். அனுராதபுர மாவட்டத்தில்தான் இந்த எண்ணிக்கை அதிகமாக உள் ளது.

மீண்டும் சேவையில் இணைந்தவர்கள் உடனடி யாக யுத்த முனைக்கு அனுப்பி வைக்கப்படமாட் டார்கள். அவர்கள் தயார் நிலைக்குக் கொண்டு வரப் பட்ட பின்புதான் அனுப்பி வைக்கப்படுவார்கள்.

சேவையில் சேராதவர் களைக் கைது செய்வதற்கு பாரிய நடவடிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது— என்றார். (ஐ-6-9-10-21)

(மற்றொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்)

**முல்லைத்தீவில்...**

(முதலாம் பக்கத் தொடர்)

முல்லைத்தீவு ஊற்றங்கரை விநாயகர் ஆலயத்தில்நடந்த திருவிழாவில் கலந்து கொண் டிருந்த பக்தர்கள் குண்டு வீச்சை அடுத்து சிதறி ஓடிப் பாதுகாப்புத் தேடினர். (ஐ-9)

**கிரனேட்...**

(முதலாம் பக்கத் தொடர்)

சில நபர்களே இத்தாக்கு தலை நடத்தியுள்ளனர்.

வீட்டில் இருந்தோர் அயலவர்களை உதவிக்கு அழைத்தபோது கிரனேட் வீசப்பட்டதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ஐ-21)

**படையில்...**

(முதலாம் பக்கத் தொடர்)

யில் சேர்க்கப்பட்டவர் என்க் தெரிவிக்கப்பட்டது.

ஹிக்கடுவவைச் சேர்ந்த எஸ். சாந்தகுமார (வயது 27) என்பவரே தற்கொலை செய்து கொண்ட சிப்பாய் ஆவார். தென்பகுதியில் இடம்பெற்ற சமூகவிரோதச் செயல்கள் பலவற்றுடன் இவ ருக்குத் தொடர்பு இருந்தது தெரியவந்திருப்பதை அடுத்தே அவர் தற்கொலை புரிந்துள்ளதாகக் கூறப்படு கிறது. (ஐ-21)


எமது புதிய வெளியீடு!

அஜித் - சிம்ரான் கவுண்டமணி, செந்தில் நடித்த

அவள் வருவாளா

(தரமான பிரதி)

சுப்பலோ வீடியோ

யாழ்ப்பாணம். (சி/3729)



எமது நேற்றைய புதிய வெளியீடு!

அஜித் - பிருத்வி கவுண்டமணி, செந்தில் நடித்த

அவள் வருவாளா

(ஒறிஜினல்)

புது முகங்கள் நடித்த

சம்பூர்ண ஹரிச்சந்திரா

அடுத்த புதிய வெளியீடு!

முரளி- ரேவதி-சங்கீதா நடித்த

ரத்னா

வீடியோ விமல்

யாழ்ப்பாணம். (சி/3727)


## மரண அறிவித்தல்

திருமதி

### இரத்தினம் சண்முகம்

நல்லூர் மருதடி வீதியைச் சேர்ந்த திருமதி இரத்தினம் சண்முகம் நேற்று பிற்பகல் காலமானார்.

இவர் மு. சண்முகம் (காங்கேசன்துறை சிமெந் துத் தொழிற்சாலை கன்டீனின் முன்னாள் முகாமை யாளர்) அவர்களின் அன்பு மனைவியும், கிட்லர் (கனடா), கிச்னர் (கனடா), டென்சிங் (ஜேர்மனி), கால்சிங் (பிரான்ஸ்), தயாளன் (ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி), திருமதி கலா விஜயரத்தினம், குணாளன் (கனடா), லிங்கன் (கனடா), ஜோன்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி நகுலாம்பிகை கிட்லர், திருமதி புவனேஸ்வரி கிச்னர், திருமதி நற்குணம் டென்சிங், திருமதி நாகராஜேஸ் வரி காலசிங், திருமதி ரோஹிணி தயாளன், விஜய ரத்தினம், திருமதி ஆனந்தி குணாளன், திருமதி செல்வராணி லிங்கன், திருமதி கோசலா ஜோன்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜோல்வ், அனோத்தா, காஸ்ட்ரோ, பனிஸ்ட்ரோ, சுஜிகா, சுரேக்கா, சுவேக்கா, ஜெஸ்மின், ஜெரோம், ஹேஸ், ஸ்ரேவின், தயானா, விவியன், வினூஜன், காருண்யா, ஆரூரன், வாகீசன், சுஜான், சர்வி, ஸ்ரெவி, விவிங்ஸ் டன், விவிஷ் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ் வாய்க்கிழமை (12-05-1998) மாலை 4.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தக னக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத் துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சண் தயாளன்

(ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி)

(மகன்)

க. விஜயரட்ணம்

(கிராம சேவையாளர் J/75, சுண்டுக்குளி தெற்கு)

(மருமகன்)

57, மருதடி வீதி,

நல்லூர்.

பண்டத்தரிப்பு

## பற்றிமா அன்னையின் திருவிழா

யாழ். மறைமாவட்ட ஆயர் மேன்மைதங்கிய

தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை

அவர்களால் 13 - 5 - 98 (புதன்கிழமை) காலை 7-00 மணிக்கு திருவிழாத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப் படும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி!

(55943) பங்குத்தந்தை

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன் (பிறை வேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரி யார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணி மனையில் 12-5-1998 இல், அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org